உலக வரலாற்றில் முதன்முறையாக இ-மெயிலில் வெளிவரும் இதழ்

ஆன்மிகமலர் டிரஸ்ட் வெளியீடு

e-magazine

www.aanmeegamalar.com

# ஆன்மிகமலர்

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

மெயில் புக்

விருப்ப சந்தா செலுத்த ஸ்கேன் செய்யவும்

சிறப்பு மலர்



# அருள்தரும் அம்மன் ஆலயங்கள்

உலக பிரசித்தி பெற்ற மதுரை ஸ்ரீமீனாட்சி சுந்தரேஸ்வரர் பேரருளால்
தரம் எங்களுக்கு இறைவன் கொடுத்த வரம்!

தரத்தில் உயர்ந்தது! ருசியில் சிறந்தது! எண்ணெய் குடிக்காத அப்பளம் உண்ண தூண்டும் உன்னத சுவை!



# ஸ்ரீராம் அப்பளம் & புட் பஜார்

# SRI RAM APPALAM

Special Quality

Special Quality

Export Quality

எங்களிடம் தரமான அப்பளம், அப்பளப்பூ, மிளகு அப்பளம், சோவி அப்பளம், கல்யாண அப்பளம், மோதிர அப்பளம், பாய் அப்பளம், மசாலா அப்பளம், சீரக அப்பளம், அரிசி அப்பளம், தக்காளி வடகம், வெங்காய வடகம், சோற்றுக் கூழ் வடகம், ஜவ்வரிசி வடகம், கலர் வடகம் வகைகள்

ஸ்ரீராம் மஞ்சள் தூள், அரிசி மாவு, புட்டு மாவு, முறுக்கு மாவு, பெருங்காயம், பருப்பு வகைகள், மக்ருன் வகைகள், மோர் வத்தல், சுண்ட வத்தல் மற்றும் ஊறுகாய் வகைகள் மொத்தமாகவும், சில்லரையாகவும் கிடைக்கும்

(ஸ்ரீராம் அப்பளம் எண்ணெய் குடிக்காத அப்பளம்)

தரம்! இறைவன் எங்களுக்கு அளித்த வரம்

Email Id: sriram.rajkumar1989@gmail.com / Web:www.sriramappalam.com

தயாரிப்பு கூடம்: 4/15A அனுப்பானடி சாலை, சிந்தாமணி, மதுரை- 625009

விற்பனையகம்: 51, அம்மன் சன்னதி, மதுரை - 625 001.

தொடர்புக்கு: 98432 60908, 9787932299, 95004 95248, 84388 70908


# ஆறுபடை வீட்டு பிள்ளையார்














ஆறுபடைவீட்டைக் கொண்டவர் முருகன் மட்டுமல்ல, விநாயகருக்கும் ஆறுபடை வீடு உள்ளது. ஒவ்வொரு படை வீட்டுக்கும் ஒவ்வொரு சிறப்பு உள்ளது. இந்த ஆறுபடை வீட்டு விநாயகரும், அவரை வழிபட்டால் கிடைக்கும் பலனையும் பார்ப்போம்.

## முதல்படை வீடு: திருவண்ணாமலை

திருவண்ணாமலையில் எழுந்தருளியுள்ள விநாயகரின் பெயர் 'அல்லல் போம் விநாயகர்'. இந்த விநாயகரைக் குறித்து போற்றப்படும் பாடலே 'அல்லல் போம் வல்வினை போம், அன்னை வயிற்றில் பிறந்த தொல்லை போம்' என்பது. இவரை வழிபட அல்லல்கள் தீரும்.

## இரண்டாம் படை வீடு: விருத்தாசலம்

இங்குள்ள ஆலயத்தில் எழுந்தளியுள்ள கணபதிக்கு ஆழத்துப் பிள்ளையார் என்று பெயர். பெயருக்கேற்ப ஆழத்தில் சன்னதி கொண்டுள்ளார். இந்த விநாயகரைத் துதித்தால் செல்வமும், கல்வியும் மற்றும் சீரான வாழ்வும் நம்மை வந்து சேரும்.

## மூன்றாவது படைவீடு: திருக்கடவூர்

திருக்கடையூர் அமிர்தகடேஸ்வரர் கோயிலில் "கள்ள வாரண பிள்ளையார்' அருள்பாலிக்கிறார்.

பாற்கடலைக் கடைந்து அமிர்தம் எடுத்தபின், முதன் முதல் கடவுளான விநாயகரை வழிபடவேண்டும் என்பதை மறந்த காரணத்தால், அமிர்த குடத்தை எடுத்து இத்தலத் தில் ஒளித்து வைத்தார், இதனால் இவரை "கள்ள வாரண பிள்ளையார்' எனப்படுகிறார்.



எந்தவிதமான வாழ்க்கை வசதிகள் நமக்கு அமையப் பெற்றிருந்தாலும் அதை அடைய நமக்கு மிக முக்கியத்தேவை நீண்ட ஆயுள். இந்த ஆயுளை அள்ளி வழங்குகிற வராக திருக்கடவூர் கள்ள வாரணப் பிள்ளையார் விளங்கு கிறார்.

## நான்காம்படை வீடு: மதுரை

மதுரை மீனாட்சியம்மன் கோவிலில் உள்ள சித்தி விநாயகர் நான்காம்படை வீடு விநாயகராக கருதப்படுகிறார். மீனாட்சி அம்மன் சன்னதிக்குள் நுழையும் முன்னர் இவரின் தரிசனத்தைப் பெறலாம். நாம் விரும்புகின்றவாறு காரியங்களை நிறைவேற்றித்தருபவராக இவர் உள்ளார். மாணிக்கவாசகர் பாண்டிய மன்னருக்காக குதிரை வாங்கப் புறப்படுகையில் இந்த சித்தி விநாயகரையே தரிசித்துச் சென்றதாக திருவிளையாடல் புராணம் தெரிவிக்கிறது.

## ஐந்தாவது படை வீடு: பிள்ளையார்பட்டி

பிள்ளையார்பட்டி கற்பக விநாயகர் ஐந்தாம் படைவீட்டின் அதிபதியராகத் திகழ்கிறார். அனைத்துப் பேறுகளும் நம்மை வந்தடைந்தாலும் ஞானம் இல்லையேல் அந்தப் பேறுகளால் ஒரு பலனும் இல்லை. அந்த ஞானத்தை வழங்குபவராகஇவர் அருள்பாலிக்கிறார். இவர் சிவலிங்கத்தைக் கையில் தாங்கி அருள்புரிகிறார். சிவலிங்கத்தை கையில் ஏந்தி சிவபூஜை செய்பவராகத் திகழும் இந்த கற்பக விநாயகரை வணங்கினால் தீட்சையும் ஞானமும் கிடைக்கும்.

## ஆறாம்படை வீடு: திருநாரையூர்

திருநாரையூரில் அருள்பாலிக்கிறார் பொள்ளாப் பிள்ளையார். அப்பரும் சம்பந்தரும் பாடிய இத்தலத்தில் இவ ரை வழிபட புதிய முயற்சிகளில் கை மேல் வெற்றி பலன் கிடைக்கும்.

# ஆண்டு முழுவதும் திருவிழா காணும் மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோவில்



சித்திரைதிருவிழா முதல் பங்குனி வசந்த உற்சவவிழா வரை மீனாட்சி சுந்தரேசுவரர் ஆலயத்தில் தமிழ் மாதம் தோறும் திருவிழாக்கள் நடை பெற்றுவருகிறது.

மீனாட்சி சுந்தரேசுவரர் கோவிலில் ஆண்டு முழுவதும் பல்வேறு விழாக்கள் கொண்டாடப் படுகின்றன. இறைவனின் 64 திருவிளையாடல்கள் வெவ்வேறு காலங்களில் இங்கு நடைபெறும், சித்திரை மாதம் முதல் பங்குனி வரை அனைத்து மாதமும் இங்கு விழாக் கோலம்தான்.

ஒவ்வொரு மாதமும் கொண்டாடப்படும் விழாவை பற்றி தெரிந்து கொள்வோம்.

தமிழ்நாட்டில் பல்வேறு இடங்களில் சித்ரா பவுர்ணமி விழா கொண்டாடப்பட்டாலும், மதுரையில்தான் சித்ரா பவுர்ணமி விழா சிறப்பாக கருதப்படுகிறது. ஒருமுறை விருத்ராசுவரன், விஸ்வரூபன் என்ற இருவரை தேவேந்திரன் கொன்றாள். அவர்கள் பிறப்பால் அந்தணர்கள் ஆனதால் இந்திரனை பிரம்மஹத்தி தோஷம் பிடித்து கொண்டது. அதிலிருந்து விடுபட தன் குருவை நாடி உபாயம் கேட்டான். குருபகவான் அவனிடம் பூலோகம் சென்று பல்வேறு சிவஸ்தலங்களில் வழிபட்டால் ஓரிடத்தில் உன்கெடுதல் நீங்கும் என்று கூறி னார்.

அதன்படி இந்திரன் காசி முதலிய பல தலங்களில் வழிபட்டு தெற்கு நோக்கி வந்தான். ஓரிடத்தில் கடம்ப மரத்தின் கீழ் சென்றவுடன் தன்னை பற்றியிருந்த தோவும் விலக்கண்டான். இந்திரன் மகிழ்ச்சியடைய அவன் முன் கடம்ப மரத்தடியில் சிலபெருமான் திருஆலவாய் சோமகந்தார் அவ னுக்கு காட்சி கொடுத்தார். இந்திரன் சிவபெருமானுக்கு கோவில் கட்ட நினைத்து தேவலோகத்தில் இருந்து ஒரு விமானம் வரவழைத்தான்.

இத்தலத்து இறையனுக்கு இந்திரன் விமானம் அமைத்த தால் அதற்கு இந்திர விமானம் என்றும், விண்ணில் இருந்து வந்ததால் விண்ணிழி விமானம் என்றும் சொல்லப்படுகிறது.

இந்திரனிடம் ஒவ்வொரு வருடமும்சித்ரா பவுண்மி நாளில் என்னை இங்கு வந்து வழிபடுக என்று கட்டளை யிட்டார். ஒவ்வொரு வருடமும் சித்ரா பவுர்ணமி நாளில் இந்திரன் இங்கு வந்து வழிபடுகிறான் என்று திருவிளையாடல் புராணம்கூறுகிறது.

அதனால் தான் சித்ராபவுர்ணமி மதுரையில் சிறப்பாக கருதப்படுகிறது.

வைகாசி வைகாசி மாதம் கோடை வசந்த திருவிழா, திரு வாதிரை நட்சத்திரத்தியே இருந்து பத்து நாட்கள் எண்ணெய்க் காப்பு நடக்கிறது.

ஆனி மாதம் மகம் நட்சத்திரத்திருந்து ஊஞ்சல் உற்சவம். தினமும் மாலை ஆறு மணியில் இருந்து இரவு ஒன்பது மணி வரைக்கும் நூறு கால் மண்டபத்தில் ஒரே ஊஞ் சலில் சுந்த ரேசுவரர் மீனாட்சி அமர்ந்து ஊஞ் சலாட, கோயி லின் ஓதுவார்கள். மாணிக்க வாசகரின் பொன்னூஞ் சல் பாடங்களை பாட ஊஞ்சல் உற்சயம் நடை பெறுகிறது.

பத்து நாளைக்கு முளைக் கொட்டு



# பச்சை மரகதக் கல்லில் உருவான மீனாட்சி

மதுரை மீனாட்சி அம்பாளின் விக்கிரகம், மரகதக் கல்பச்சைக் கல்லால் ஆனது. அம்பாள் மீனாட்சியின் கருவறையானது, 32 சிங்க உருவங்களும், 64 சிவகணங்களும், 8 கல்யானைகளும் தாங்கி நிற்கும் அபூர்வமானதாகும்.

இந்தக் கருவறை விமானத்தைத் தேவேந்திரன் அமைத்தான். மீன் போன்ற கண்களைப் பெற்றவர் என்பதால், மீனாட்சி என்று பெயர்பெற்றார். மீன், தன்னுடைய முட்டைகளைத் தனது பார்வையாலேயே தன்மயமாக்குவது போல, மீனாட்சி அம்மன், தனது பக்தர்களை, அருட்கண்ணால் நோக்கி அருள்பாலிக்கிறவள்.

மீனாட்சியம்மன் திருக்கோலத்தில், கிளியும் இடம்பெற்றுள்ளது. பக்தர்களின் கோரிக்கையை, அம்பிகைக்கு நினைவூட்ட, திரும்பத் திரும்ப, கிளி சொல்லிக் கொண்டிருப்பதாக நம்பிக்கையுள்ளது. இந்திரன் சாப விமோசனத்திற்காக, இத்தலத்தினைத் தேடி வந்தபோது, கிளிகளே, சிவவழிபாட்டிற்கு உதவி செய்தன.

இவருக்குப் பச்சைதேவி, மரகதவல்லி, தடாதகை, அபிசேகவல்லி, அபிராமவல்லி, கயற்கண்குமாரி, கற்பூர வல்லி, குமரித்துறையவள், கோமகள், சுந்தரவல்லி, பாண்டிப் பிராட்டி, மதுராபுரித் தலைவி, மாணிக்க வல்லி, மும்முலைத்திருவழுதி மகள் போன்ற எண்ணற்றப் பெயர்கள் உள்ளன.

உற்சவம் நடைபெறுகிறது. கொடியேற்றம் மீனாட்சிக்கு மட்டுமே நடைபெறும்.

ஆவணி மாதம் மூலத் திருநாள், ஆவணி மூல உற்சவம் என்றே பெயர் பெற்றது. நான்கு ஆவணி வீதிகளிலும் அம்பாளும், சுந்தரேசுவாரும் வீதி உலா வருவார்கள் திரு விளையாடல், பிட்டுக்கு மண்ட சுமந்த திரு விளையாடல், நரியை பரியாக்கியது. விறகு விற்றல் போன்ற திருவிளையாடல்கள் நடைபெறும். மூல நட்சத்திரத்தின்று சுந்தரேசு வரருக்கு பட்டாபி சேகம் நடைபெறுகிறது.

புரட்டாசி மாதத்தில் நவராத்திரி கொலு விழா நடைபெறுகிறது. ஒவ்வொரு அலங்காரத்தில் மீனாட்சி அலங்காரத்தை காண ஏராளமான பக்தர்கள் வருவார்கள்.

ஐப்பசி மாத பிரதமையிலிருந்து அமாவாசை நாளிற்கு அடுத்த நாள் சஷ்டி, அமாவாசை நாளிலிருந்து ஆறாவது நாள் வரையிலும் கோலாட்ட உற்சவம். புது மண்டபத்திலே அம்மன் கொலுவிருந்து மதுரை இளம்பெண்கள் கூடியிருந்து கோலாட்டமாட உற்சவம் நடக்கிறது.

கார்த்திகை மாதம் பத்து நாட்கள் தீப உற்சவம். கார்த்திகை தீபதின்னத்தில் அம்மன் சன்னதியிலும் சுந்தரேசுவரர் சன்னதியிலும் சொக்கப்பனை கொளுத்தப் படுகிறது.



மார்கழி தனுர் மாத வழக்கப்படி காலையில் சீக்கிரமே நடை திறந்து இரவு ஒன்பது மணிக்கு நடுநிசி முடிந்து விடுகின்றது. தினமும் வெள்ளியம்பல நமாளர்சன்னதியிலிருந்து மாணிக்கவாசகர்முன்பாக கோவிலின் ஆஸ்தான ஒதுவார்கள் திருவெம்பாவை பாடல் களை பாடி போற்றுவார்கள். அதிகாலை 5.30மணியில் இருந்தே இது நடக்கும். இதில் பத்து 'நாட்கள்' எண்ணொய்' காப்பு நடக்கும். இந்த பத்து நாட்களும் சுவாமியும், அம்பாளும் புறப்பாடு கிடையாது. மாணிக்கவாசகர் மட்டுமே புறப்பாடு நிகழ்வு நடைபெறும். பதினோராம் நாள் ரிஷபவாகனத்தில் அம்மன் சுவாமி ஆடி வீதியில் வலம் வருகிறார்.

தை தை மாதம் தெப்பத் திருநாள் நடக்கும். வண்டியூரில் திருமலை நாயக்கரால் தோண்டப்பட்ட தெப்பக்குளத்தில் வசந்த மண்டபத்தில் தெப்பம்' கட்டி சுவாமியையும், அம்பாளையும் அதில் எழுந்தருளச் செய்து தெப்பவிழா நடைபெறும்.

மாசி மக உற்சவம் பங்குனி வசந்த உற்சவம் மண்டல உற்சவம் நடைபெறும். இதுதவிர பங்குனி உத்திரம், சாரதா நவராத்திரி இரண்டும் சேர்ந்து வரும் திருவிழா. பங்குனி மாதக் கார்த்திகை நட்சத்திரத்திலிருந்து உத்திரம் நட்சத்திரம் வரை அம்மனும் சுவாமி யும் வெள்ளியம்பலத்திலேயே அமர்ந்து பக்தர்களுக்கு காட்சி கொடுப்பார்கள். சுவாதி நட்சத்திரத்தன்று இருவரும் மகனின் திருமணக்கோலம் காண திருப்பரங்குன்றம் முருகன் கோவிலுக்கு எடுத்து செல்லப்படுகிறார்கள். மேலும் அகிலம்போற்றும் அன்னை மீனாட்சி அம்மன் ஆலயத்தில் தினசரி பூஜைகள் செய்யப்படுவதுடன் சிவபெருமானுக்கு உகந்த நாட்களாக கருதப்படும் அனைத்து நாட்களிலும் சிறப்பு பூஜைகள் செய்யப்படுகின்றன.






# பழனி முருகன் வழிபாடும் தேவரகசியமும்

கலியுகத்தில், நாம் செய்த கர்மவினைகளை குறைக்கக் கூடிய மாபெரும்சக்தி முருகப் பெருமானுக்கு உள்ளது.

பழனி மலைக்கு சென்று முருகனை தரி சனம் செய்தால் நம்முடைய கர்மவினைகள் குறையும். கர்ம வினைகளால் ஏற்படும் நம்முடைய பிரச் சனைகள் தீர பழனி முருகனை எப்படி வழி பாடு, பூஜை செய்வது என்ற தேவ ரகசியம் தெரியுமா?



வாழ்வில் தடை போட்டி பொறமை கஷ்டம் போன்ற பல பிரச்சனைகள் விலக ஆண்டிகோலத் தில் இருக்கும் பழனியாண்டவர் முரு கனை தரிசனம் செய்வதால் நன்மைகள் பல உண்டாகும்

பழனி முருகப்பெருமானை ஆண்டி கோலத்தில் இருக் கும்போது தரிசனம்செய்தால் நம்மை ஆண் டியாக ஆக்கி விடுவார் என்றும், ராஜ அலங் காரத்தில் இருக்கும் போதும் மட்டுமே தரிசனம் செய்தால் ராஜ வாழ்க்கை கிடைக்கும் என்றும் பலர் சொல்ல கேட் டிருப்பீர்கள்.

ஆனால் உங்களுடைய வாழ்க்கையில் நீங்கள் தீராத துயரத்தை அனுபவித்து வந்தால், அதிகப்படியான தடைகள் உங்களுடைய வாழ்க்கையில் இருந் தால் நீங்கள் பழனி முருகனை தண்டாயுதபாணி கோலத்தில் அதாவது ஆண்டி அலங்காரத்தில் தரிசிப்பது தான் சிறந்தது

முற்றும் துறந்த தவ நிலை, அதாவது அலங்காரம் இல்லா மல் ஆண்டிக் கோலத்தில்பார்க் கும்போது நமக்குள் ஒரு மெய் ஞானம் உண்டாகும் என்பதற்காக. பெரிய ஞானிகளெல்லாம் அந்தக்கோலத்தைக் காண்பதற்காகத்தான் துடிப்பார்கள்.

முற்றும் துறந்தவர்கள், குடும்பத்தில் பல நிலைகளைக் கடந்தவர்கள் இவர் களெல்லாம் அந்தக் கோலத்தை விரும்பிப் பார்ப்பார்கள்.

ஜோதிடப்படி பார்க்கும் போது செவ்வாய் கிரகம் முருக னுக்கு வருகிறார். அதிலும் இந்த பழனி முருகன் ஞான காரகனாக இருக்கிறார். மேலும், இந்தச் செவ்வாயுடன் குருவும் கலக்கிறார். வீரம், தைரியம் இதற்கெல்லாம் உரியது செவ்வாய்.

இந்த வீரமும், தைரியமும் இருந்ததால்தான் எல்லோரையும், எல்லா வற்றையும் உதறித் தள்ளி விட்டு அவர் இங்கு வந்து நிற்க முடிந்தது.


ஆனால் நின்ற உடனேயே அங்கு குரு வந்து விடுகிறார். செவ்வாயாக வீராவேசத்துடன் கிளம்பி குருவாக நிற்கிறார்.

வழக்குகளெல்லாம் நடக்கிறது, தீராத நோய்க ளெல்லாம் இருக்கிறது போன்ற பிரச்சனைகளுக்கு அலங்காரம் இல்லாத முருகனை வணங்குவதே நன்று. 20 வருடமா வாதாடிக் கொண்டிருக்கிறேன். தீர்ப்பு தள்ளி தள்ளிப் போகிறது என்றால் அதற்கு அலங்காரம் இல்லாத ஆண்டிக் கோல முருகன் வழிகாட்டுவார்.

தீராத நோய், மருத்துவர்கள் சொல்லிவிட்டார்கள், அவ்வளவுதான் என்ற நிலையில் அதற்கும் நீங்கள் முருகனின் ஆண்டி கோலத்தை தரி சிக்கலாம்.

மன குழப்பத்தால் அவதி அடைபவர் கள் ஆண்டிக் கோல முருகனை வழி படச் சொல்லலாம். அவர்களின் மன நி லையில் மாற்றங்கள் ஏற்படுவதை கண்கூடாகப் பார்க்கலாம்.பேச இயலாதவர்கள், குறைபாடு உள்ளவர்கள், மன எழுச்சி, மனஉளைச்சல் உள்ளவர்கள் இவர்களெல்லாம் அந்தக் கோலத்தைப் பார்த்தால் ஒரு சாத்வீகம், சமத்துவம் அவர்கள் மனதிற்குள் பாயும் இது இக்கோவிலின் தேவரகசியமாகும்.

திங்கள் கிழமையில் காலைநேரத்தில் மலையேறி முருகப் பெருமானை ஆண்டி கோலத்தில் தரிசித்தால், வாழ்க்கையில் இருக்கக்கூடிய தடைகள் அனைத்தும் நிவர்த்தியாகி படிப் படியான முன்னேற்றம் மாற்றம் ஏற்படும்.

பழனி ஸ்ரீ ஞான தண்டாயுதபாணி சுவாமி
பங்குனி உத்திர விழா காண
வருகை தரும் பக்தர்களே வருக! வருக!!
இறைபணியில் P.முருகேசன் உரிமையாளர்
சுவாமி விலாஸ் விபூதி ஸ்டோர்
186, 6வது தெரு பெரியப்பா நகர், பழனி, செல்9443012588
aanmeegamalar.com

# பக்தர்களுக்காக விரதம் இருக்கும் சமயபுரம் மாரியம்மன்

ஒட்டுமொத்த உலகத்தில் உள்ள அத்தனை மாரியம்மன் கோயில்களுக்கும் தலைமை பீடமானதுதான் சமயபுரம் ஆகும். சக்தி தலங்களில் மிகவும் பிரசித்தி பெற்றது இந்த தலம். தன்னை தரிசிக்க வரும் பக்தர்களுக்கு நோய்கள், தீவினைகள் அணுகாது, சகல சவுபாக்கியங்களும் கிடைக்க ஆண்டுதோறும் மாசி மாத கடைசி ஞாயிறு முதல், பங்குனி மாதகடைசி ஞாயிறு வரை பக்தர்களுக்காக சமயபுரம் மாரி அம்மனே 28 நாட்கள் பச்சை பட்டினி விரதம் இருக்கிறார்.

அம்மனின் இந்த விரதம் சமயபுரம் கோவிலின் தனிச்சிறப்பாகவே கொண்டாடப்படுகிறது.

இந்த 28 நாட்களில் அம்மனுக்கு தளிகை, நைவேத்தியம் கிடையாது. துள்ளு மாவும், நீர்மோர், கரும்பு, பானகம் மற்றும் இளநீர் மட்டுமே நைவேத்தியமாக படைக்கப்படுகிறது.

ஸ்ரீரங்கநாதரின் தங்கை சமயபுரம் மாரியம்மன். அண்ணன் ஸ்ரீரங்கநாதரைப் போன்றே சுதையினால் ஆன சுயம்பு வடிவமாக பக்தர்களுக்கு காட்சி அளிக்கிறாள்.

தட்சன் யாகத்துக்குச்சென்ற தாட்சாயணியை தூக்கி சிவபெருமான் ருத்ரதாண்டவம் ஆடியபோது அம்மனின் திருக்கண் இப்பகுதியில் விழுந்ததால் இந்த திருத்தலத்திற்கு கண்ணனூர் என்ற பெயர் புராணகாலம் தொட்டே இருந்து வருகிறது.

மிகத்தொன்மையான உற்சவ அம்மனின் திருமேனியில்இன்றும் ஆயிரம் கண்கள் உள்ளன.

இக்கோவிலில் எழுந்தருளியுள்ள மகாமாரியம்மன் மிகப்பெரிய சுயம்பு திருவுருவமாக, விக்கிரசிம்மாசனத்தில் ஆயிரம் கோடி சூரியபிரகாசத்துடன் தங்கதிருமுடி யுடன் குங்குமநிற மேனியில், நெற்றியில் வைரபட்டை ஒளி வீச, வைரகம்மல்களும், வைர மூக்குத்தியும், சூரிய, சந்திரனைபோல் ஜொலித்து, கண்களில் அருளொளிபாவித்து, அன்னைக்கு அன்னையாய், ஆதிமுதல் ஆதாரசக்தியாய் அருள்பாலிக்கிறார்.

அம்மனின் சுயம்பு திருமேனியில் நவக்கிரக ஆதிக்கத்தை உள்ளடக்கி நவக்கிரகங்களை நவசர்ப்பங்களாக தரித்து அருள்பாலிப்பதால் அம்மனை தரிசனம் செய்வதன் மூலம் நவக்கிரக தோஷம் நீங்கும் என்பது ஐதீகம்.

இக்கோவிலில் இருக்கும் அம்மனை அமாவாசை, பவுர்ணமி மற்றும் கிரகண காலங்களில் வழிபட்டால் உச்ச பலன் கிடைக்கும். இத்தலத்தில் வழிபட்டால் ராகு, கேது தோஷம் நிவர்த்தியாகும் என்பதற்கு இக்கோவிலின் மேற்கூரையில் சிற்ப சான்றும் உள்ளது.



27 நட்சத்திரங்களின் ஆதிக்கங்களையும் தன்னுள் அடக்கி 27 எந்திரங்களாக திருமேனி பிரதிஷ்டையில் மகா மாரியம்மன் அருள்பாலிப்பது தனிப்பெரும் சிறப்பு அம்சமாகும். மேஷம் முதல் மீனம் வரையிலான 12 ராசிகளின் அதிபதியாக அம்மன் ஆட்சி புரிகிறார் என்பதற்கும் சிற்பச் சான்றுகள் உள்ளன.

இக்கோவிலில் அம்மன் அஷ்ட புஜங்களுடன் வீற்றிருப்பது வேறு எந்த மாரியம்மன் கோவிலிலும் காணக்கிடைக்காத அரிய காட்சியாகும். மேலும் மாரியம்மன் வடிவங்களில் ஆதி பீடம் சமயபுரம் ஆகும். எனவே தான் இக்கோவிலில் எழுந்தருளியுள்ள மகாமாரி பதம் மாறி சிவ பதத்தில் மிகப்பெரிய சுதை சுயம்பு திருவுருவமாக காட்சி அளிக்கிறார்.

தேவர்களை இம்சித்த மகிஷாசூரனை புரட்டாசி மாதம் ஒன்பது நாட்கள் தவமிருந்து வதம் செய்தார் அன்னை ஆதிபராசக்தி. மகிஷாசூரனை வதம் செய்த பாவம் தீரவும், தன் கோபம் தணியவும் சோழ வள நாட்டின் தலைநகர் திருச்சிக்கு நேர் வடக்கே காவிரி வடகரையில் வேம்பு காட்டில் கவுமாரி என்று பெயர் பூண்டு சிவப்பு நிறம் கொண்டு மஞ்சள் ஆடை தரித்து, உடல் முழுவதும் வாசனை புஷ்பங்களால் மலை போல் குவித்து உண்ணா நோன்பிருந்து பல ஆண்டு காலம் தவம் செய்து அதன் பயனாக சாந்த சொரூபிணியாக சர்வரட்சகியாகி மாரியம்மன் என்ற பெயரில் அருள்பாலிக்கிறார்.

இந்த புராண வரலாற்றின் அடிப்படையில் தான் சமயபுரம் மாரியம்மன் கோவிலில் ஆண்டுதோறும் மாசி மாதம் கடைசி ஞாயிற்றுக்கிழமை முதல் பங்குனி மாதம் கடைசி ஞாயிறு வரை அம்பாள் பச்சை பட்டினி விரதம் இருந்து உலக ஜீவன்களை ரட்சித்து வருகிறார்.

பச்சை பட்டினி விரதத்தை அம்மன் அனுசரிக்கும் அன்றைய தினம் அதிகாலை விக்னேஷ்வர பூஜை, புண்யாக வாசனம், அனுக்ஞை, வாஸ்துசாந்தி, அங்குரார்ப்பணம் முடிந்து காலை 6.30 மணிக்கு மேல் 8 மணிக்குள் மீனலக்கனத்தில் அம்மனுக்கு காப்பு கட்டுதலுடன் பூச்சொரிதல் விழா ஒவ்வொரு ஆண்டும் நடைபெறும். இதில் பல ஆயிரம் பக்தர்கள் கலந்து கொள்வது வழக்கம்.

# திருச்செந்தூர் முருகனின் மகிமைகள்...

திருச்செந்தூர் போர் நடந்த இடம் ஆதலால், செந்தி லாண்டவன் கோயில் அருகில் உள்ள கடல் நீர் சற்றே சிவந்து ரத்த நிறமாயிருக்கிறது. மார்கழித் திருவாதிரை திருமுழுக்கின் போது அபிஷேகத்துக்குப் பிறகு திருச் செந்தூர் நடராஜருக்கு முருகப் பெருமானின் அணிகலன்கள் அணிவிக்கப்படுகின்றன.

மாமரமாக மாறிய சூரபத்மனை வேலாயுதத்தால் முருகப் பெருமான் இரண்டாகப் பிளந்தார். அதன் ஒரு பகுதி சேவலாகவும், மற்றொன்று மயிலாகவும் மாறியது. அதனால் இங்கு மாமரங்கள் வளர்வதில்லை.

இங்குள்ள சண்டிகேஸ்வரருக்கு புதிய மாலைகளை சாத்த மாட்டார்கள். மூலவருக்கு சாத்திக் கழித்த மாலையையே சண்டிகேஸ்வரருக்கு அணிவிக்கிறார்கள்.

மூலவர் சந்நிதி இரவில் அடைக்கப்பட்டதும் இங்கு அமைந்துள்ள பைரவர் சந்நிதியில் சாவியை வைக்கிறார்கள். இவரது சந்நிதியில் உள்ள விளக்கில் இருந்து வேறொரு விளக்கில் அக்னியை ஏற்றிச் சென்றுதான் மடைப்பள்ளி அடுப்பைப் பற்ற வைக்கிறார்கள். இரவில் இவருக்கு வடை நைவேத் தியம் செய்யப்படுகிறது.



முருகனின் வாகனமான மயி லுக்கு பொரி படைக்கிறார்கள்.

தவத்திரு ஆறுமுக சுவாமிகள், தவத்திரு மௌன சுவாமிகள், தவத் திரு காசி சுவாமிகள் ஆகியோர் ஆலயத்துக்கு திருப்பணி செய்துள்ளனர்.

கோயிலுக்கு தெற்கில் (சஷ்டி மேட்டுத் திட லுக்கு அருகில்) இவர்களது ஜீவ சமாதிகள் உள்ளன.

வள்ளி சந்நிதிக்கு வலப்புறம் உள்ள தூண்களில் இவர் களின் சிலைகளைக் காணலாம். இவை மூலஸ்தானத்தை நோக்கியவாறு உள்ளன.

'இங்கிருந்து நீவிர் அருள்பாலிக்கும் வரை கடலால் கோ யிலுக்குத் தீங்கு நேராது!' என்பது வருண பகவானின் சத்திய வாக்கு. சுனாமி தமிழ்நாட்டைத் தாக்கியபோது திருச்செந்தூருக்கு எந்த அபாயமும் ஏற்படவில்லை என்பதே இதற்குச் சான்று.

பிரிட்டிஷ் கிழக்கிந்தியக் கம்பெனியின் அதிகாரி ஒருவர் 59 காசுகளுள்ள தங்கக் காசு மாலையை முருகனுக்கு அளித்துள்ளார். 100 அமெரிக்கன் டாலர்களால் செய்யப்பெற்ற காசு மாலையும் உள்ளது. சிறப்பு நாட்களில் மட்டுமே இந்த ஆபரணங்களை முருகனுக்கு அணிவிக்கிறார்கள்.

ஸ்ரீசண்முகரின் உயரத்துக்கு ஏற்ற வைர வேல் ஒன்று இங்குள்ளது. இது 100 பவுன் தங்கம், 40 காரட் வைரம் ஆகியவற்றால் செய்யப்பட்டது. நடுவில் பெரிய பச்சைக் கல் கொண்டது. கி.பி.1917ல் கொத்தமங்கல் சி.ராம்ஜி குடும்பத்தாரால் அர்ப்பணிக்கப்பட்டது.

திருச்செந்தூர் முருகனுக்கு அமுது படைக்கும்போது கீழே விழும் பருக்கைகளை எடுக்க தங்க ஊசி ஒன்று பயன்படுத்தப்படுகிறது. கும்பாபிஷேகத்தின் போது குடத்துக்குள் இடப்படும் பொருட்களுள் தங்க மீன்களும், தங்கத் தாமரைப் பூக்களும் இடம்பெறுகின்றன. பூஜை முடிந்ததும் தங்கச் சாமரம் கொண்டு கவரி வீசுவர்.

மாசித் திருவிழாவின் 8ஆம் நாளன்று ஸ்ரீசண்முகருக்கு அபிஷேகிக்கும்போது தங்கப்பிடியுடன் கூடிய காண்டாமிருகக் கொம்பின் வழியாக நீர் ஊற்றுகிறார்கள். இவை தவிர தங்க ஆமை ஒன்றும், கும்பாபிஷேகத்தின்போது தலைமைப் பட்டர் அணிந்துகொள்ள நவரத்தின மோதிரங்களும் உள்ளன.

இலங்கை மன்னன் கண்டி அரசன் கனவில் திருச்செந்தூர் முருகன் தோன்றி, சந்தன மரம் ஒன்றை வெட்டிக் கடலில் மிதக்க விடச் சொன்னார். மன்னன் வெட்டித் தள்ளிய மரம் திருச்செந்தூர்க் கரையை அடைந்தது. இந்த மரமே கொடிமரமாக உள்ளது. இந்தச் செய்தி திருச்செந்தூர் பிள்ளைத் தமிழிலும் இடம் பெற்றுள்ளது.

திருச்செந்தூர் கோயில் மடைப் பள்ளியில் வேலை பார்த்த வென்றிமாலை. என்பருக்கு "சம்ஸ்கிருதத்தில் உள்ள தலபுராணத்தை தமிழில் சொல்லித் தா" என்ற முருகனின் கட்டளைக்கினங்க 'செவலூர் சாஸ்திரிகள்' சொல்லச் சொல்ல, செந்தூர் தல புராணத்தை மொத்தம் 899 தமிழ்ப் பாடல்களாக புனைந்தார் வென்றிமாலை. வென்றிமாலைக்கு கவிராயர் பட்டம் தந்தார் சாஸ்திரியார்.

இந்தப் புராணத்தை புறக்கணிக்கப்பட்டு, கடலில் வீசப்பட்டது, அந்தப் புராணம் கடலில் மிதந்து இலங்கை சென்றடைந்து முருகனின் புகழ் இலங்கையில் பரவியது. இந்த புராணம் திருச்செந்தூர் முருகன் கோவிலில் இன்றும் பாதுகாக் கப்பட்டு வருகிறது.







அருள்மிகு தாயமங்கலம் முத்துமாரியம்மன் திருவிழா
காண வரும் பக்தர்களை அன்புடன் அழைக்கிறோம்!



# ஸ்ரீ பேச்சி அம்மன்

## டிரான்ஸ் போர்ட் & டிரேடர்ஸ்
## சேம்பர் பிரிக்ஸ் & ரியல் எஸ்டேட்

எங்களிடம் உயர்தரமான
அளவில் பெரிய சேம்பர்
செங்கல் கிடைக்கும்
பொறியாளர்கள் பில்டிங்
ஒப்பந்ததாரர்கள் அணுகவும்





உரிமையாளர் **எம்.கந்தசாமி**
செல் 9843789337 9487059737

அலுவலக முகவரி
பிளாட் 1&2 செல்வபுரம் மெயின்ரோடு, குகன் பள்ளி
அருகில், தெப்பக்குளம், மதுரை-626009

சேம்பர் முகவரி
கிருங்கா கோட்டை முத்தனேந்தல் அருகில்
மதுரை-ராமேஸ்வரம் பை-பாஸ் ரோடு மானாமதுரை

aanmeegamalar.com

# அம்மனை துப்பாக்கியால் சுட்ட ஆங்கிலேயன் தோட்டாவை மலராக மாற்றிய அம்மன்

# தங்கைக்கு அண்ணன் அனுப்பும் பூக்கள்



தங்கை மாரியம்மனுக்கு அண்ணன் ஸ்ரீரங்கம் ரங்கநாதரிடம் இருந்து வரும் பூக்களே, முதலில் சொரியப்படுகிறது. பூச்சொரிதல் விழா உருவாகக் காரணமான அற்புத நிகழ்வைப் பற்றி இங்கு பார்ப்போம்.

ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில், திருச்சியைக் கைப்பற்றுவதில் ஆங்கிலேய படைக்கும் பிரஞ்சுப் படைக்கும் இடையே மிகப் பெரிய போட்டி நிலவியது. பிரெஞ்சுப் படைகள் ஸ்ரீரங்கத்தில் முகாமிட்டு இருந்தனர்.

கொள்ளிடத்தில் வெள்ளம் வரவே, ஆங்கிலப் படை வீரர்கள் சமயபுரத்தில், தங்கள் ஆளுநர் இராபர்ட் கிளைவ், மற்றும் தளபதிகளான ஜின்ஜின், டால்டன், லாரன்ஸ் ஆகியோருடன் தங்கி இருந்தனர். தாங்கள் கொண்டுவந்திருந்த ஆயுதங்கள் மற்றும் வெடிமருந்துகளைக் கொட்டகை அமைத்துப் பாதுகாத்தனர். எனவே இரவு நேரத்தில் மக்கள் யாரும் வீட்டை விட்டு வெளியே வரக்கூடாது என்று தடை உத்தரவு போட்டனர்.

ஒருநாள், தளபதி ஜின்ஜின் நள்ளிரவில் ஆயுதங்கள் இருந்த கொட்டகையைப் பாதுகாக்க சுற்றி வந்து கொண்டு இருந்தான். அப்போது மஞ்சள் ஆடை உடுத்தி, ஒரு பெண் தனது இரண்டு கைகளிலும் தீச்சட்டி ஏந்திச் சென்றாள். யார் நீ? நில் என்று கத்தினான் ஜின்ஜின். ஆனால், அவனது குரலைப் பொருட்படுத்தாமல் அந்தப் பெண் சென்றாள்.

துப்பாக்கித் தோட்டாக்கள் அனைத்தும் பூக்களாக மாறி, அந்தப் பெண்ணின் தலையில் விழுந்தன. துப்பாக்கிச் சத்தம் கேட்டு வெளியே வந்த ஊர் மக்கள் ஜின்ஜின்னிடம், 'தவறு செய்துவிட்டீர்கள், எங்கள் காவல் தெய்வம் மாரியம்மனை சுட்டுவிட்டீர்கள்' என்று கூறினர். இதை நம்பாத ஜின்ஜின் வேகமாக ஆலயத்துக்கு ஊர்மக்களுடன் சென்று பார்த்தான். அப்போது கருவறையில் அம்மன் இல்லை.

திடீரென ஒரு பேரொளி கருவறையை நிரப்பியது. பீடத்தில் மீண்டும் அம்மன் வந்தமர்ந்தாள். அனைவரும் விழுந்து வணங்கினர். ஆனால், ஜின்ஜினுக்கு கண்பார்வை பறிபோய் இருந்தது. பின்னர் ஊர்மக்களின் அறிவுரையைக் கேட்டு மாரி அம்மனிடம் மன்னிப்பு கேட்டான். மூன்று நாள் கழித்து கண்பார்வை பெற்றான். இந்த நிகழ்வில் இருந்து அம்மனுக்கு பூச்சொரிதல் விழாவானது வெகு சிறப்பாக நடைபெறுகிறது.

மற்றொரு விஷயமும் பூச்சொரிதல் வைபவத்தின் பின்னணியில் இருப்பதாகச் சொல்லப்படுகிறது.

உலக நன்மைக்காகவும், தன்னை தரிசிக்க வரும் பக்தர்களின் நலனுக்காகவும் அம்மன் பச்சைப்பட்டினி விரதம் மேற்கொள்கிறாள். (இந்த விரதம் பற்றி விரிவாக பக்கம் 7ல் கொடுத்துள்ளோம்.)

அம்மன் விரதம் இருக்கும் நாட்களில் அம்மன் மனதை குளிர்ச்சி செய்யவே பூச்சொரிதல் விழா நடைபெறுவதாகவும் சொல்லப்படுகிறது.


தேக்கு மர கதவுகள்
(200 டிசைன்களில்)
ஜவஹர் மரக்கடை
ரெடிமேட் நிலை கதவு ஜன்னல்கள்
விரும்பிய மரங்களில் வாங்கிட
GOB, T.P.K.ரோடு, மதுரை-3
94433 18482

காயத்ரி ஆவண தயாரிப்பு மையம்
ந.சிவராமகிருஷ்ணன்
பத்திர எழுத்தர்
அரசு உரிமம் எண்
A437/ TRP/1993
Cell : 98422 57449 / 99947 82295
7/22, கருணாநிதி நகர், சௌரிபாளையம், கோயமுத்தூர் - 641 028

aanmeegamalar.com

# கண்சிமிட்டி காட்சிதரும் காஞ்சி காமாட்சி

காஞ்சிபுரம் காமாட்சி அம்மன் திருக்கோவில், அன்னை லலிதா மஹா திரிபுரசுந்தரியின் முழுமை ரூபமாக காட்சி தருகிறாள். மதுரையின் மீனாட்சி, திருவாணைக்காவலின் அகிலாண்டேஸ்வரி மற்றும் காஞ்சியின் காமாட்சி இந்த மூவரும் தேவி வழிபாட்டில் மிக முக்கியமான அம்சம்.

காஞ்சி காமாட்சி அம்மன் இரு கால்களையும் மடித்து பத்மாசனத்தில் மிகவும் கம்பீரமாக அருள் தருகிறார்.

ஒரு கையில் கரும்பை வில்லெனவும், மற்றொரு கையில் தாமரை மற்றும் கிளியினையும் ஏந்தியுள்ளார். சக்தி பீடங்களாக கருதபடும் 51 முக்கிய ஸ்தலங்களில் அன்னையின் முதுகெலும்பு விழுந்த ஸ்தலம் இது என்பது குறிப்பிடத்தக்கது. காமாட்சி அம்மன் இந்த கோவிலில் "பரப்ரஹ்ம்ம ஸ்வரூபினியாக" காட்சி தருகிறார்.

காஞ்சிபுரத்தில் உள்ள அனைத்து சிவன் கோயில்களையும் மையமாகக் கொண்ட ஒரே சக்தி ஆலயம் காமாட்சி அம்மன் கோயில் ஆகும், விஸ்வப் ராஹ்மணர்களுக்கு பாத்தியப்பட்ட இந்த கோவில் பொற்கொல்லர்களின் பாரம்பரியத்தை காக்கின்ற குலதெய்வ மாக இருக்கிறது.

இது போல வேறிடங்களில்அம்ம னுக்கு தனி ஆலயங்கள் இல்லை. காமாட்சி இங்கு "பரப்ரஹ்ம ஸ்வரூபினி" என்று வணங்கப்படுகிறார்.

ஆரம்பத்தில், 'உக்ர ஸ்வரூபினி' என அழைக்கப்பட்டார். ஆதி சங்கரரால், எட்டாம் நூற்றாண்டில், இக் கோயிலில் ஸ்ரீசக்ரம் பிரதிஷ்டை செய்யப்பட்டது. மிகவும் உக்கிரமாக இருந்த காளியன் னையை, சௌம்யமான காமாட்சியாக ஆதிசங்கரர் சாந்தப்படுத்தினார்.

அயோத்தியின் தசரத சக்ரவர்த்தி இத்திருக்கோயிலில் 'புத்திர காமேஷ்டி' யாகம் செய்தார். இது மார்கண்டேய புராணத்தில் உள்ள தகவல் ஆகும்.

காமாட்சியின் பிரகாசமான முகத்தை தீர்கமாக தரி சிப்பவர்களுக்கு, அம்மனின் கண்கள் சிமிட்டுவது போன்றதான உணர்வினை ஏற்படுத்துமாம்.

காமாட்சியின் பிரகாசமான முகத்தை தீர்கமாக தரிசிப்பவர்களுக்கு, அம்மனின் கண்கள் சிமிட்டுவது போன்றதான உணர்வினை ஏற்படுத்துமாம்

காமாட்சி கோவிலின் அருகே ஆதி காமாட்சி கோவில் அமைந்துள்ளது. மேலும் இது பலவிதமான பெயர்களில் அழைக்கப்படுகிறது. க்ரித்திமதி, தந்திரசூடாமணி இந்த ரூபத்தில் நான்கு கரங்களுடனும் அதில் அங்குசம், பாச, அபய மற்றும் கபாலத்தை ஏந்தியப்படி இருக்கிறார்.

திருக்கல்வனூர் திவ்ய தேசம் காமாட்சி அம்மனின் கருவறைக்கு அருகில், 10ஆம் நூற்றாண்டின் ஆழ்வாரால் மகிமைப்படுத்தப்பட்ட விஷ்ணுவுக்கு அர்ப்பணிக்கப்பட்ட கோயில் இருந்தது. இக்கோயில் சிதிலமடைந்ததால் அங் குள்ள தெய்வம் இப்போது காமாட்சி அம்மன் கோவிலுக்குள் வைக்கப்பட்டுள்ளது.

இந்த கோவிலில் நான்கு கால பூஜை நடைப்பெறுகிறது.



இங்கு நிகழும் தேர் திருவிழாவும், தெப்ப திரு விழாவும் மிகவும் பிரசித்தி பெற்றது. ஆடி பூரம், சங்கர ஜெயந்தி, வசந்த உற்சவம் ஆகியவை மிகவும் கோலாகலமாக கொண்டாடப்படுகிறது. வெள்ளிக்கிழமைகள் மிகவும் பிரசித்தி பெற்றது.

நான்கு திசைகளிலும் ம்டங்களை நிறுவிய பின் ஆதி சங்கரர் காஞ்சி வந்தார். இங்கே காமகோடி பீடத்தை நிறுவி காமாட்சியுடன் ஐக்கியமானார்.

ஒவ்வொரு யுகத்திலும் ஒவ்வொரு மகான் அம்பிகையைப் போற்றி ஸ்லோகங்களை இயற்றி இருக்கிறார்கள்.

- ❖ கிருதயுகத்தில் துர்வாசரரால் 2,000 ஸ்லோகங்களாலும்,
- ❖ திரேதாயுகத்தில் பரசுராமரால் 1,500 ஸ்லோகங்களாலும்,
- ❖ துவாபரயுகத்தில் தௌமியாசார்யரால் 1,000 ஸ்லோகங் களாலும்,
- ❖ கலியுகத்தில் ஆதிசங்கரரால் 500 ஸ்லோகங்களாலும்

போற்றி வழிபடப் பெற்றவள் காஞ்சி காமாட்சி அம்மன்.

காஞ்சி காமாட்சி அம்மனுக்கு ஆதிசங்கரரின் சௌந்தர்ய லஹரி, மூக கவியின் மூக பஞ்சசதீ, துர்வாசரின் ஆர்யா த்விசதி ஆகிய ஸ்தோத்திரங்கள் மிகவும் பிடித்தமானவை.

இந்த கோவிலில் அன்னையின் ஆலயத்தின் முன்பாக ஸ்ரீ சக்ரத்தை நிறுவியவர் ஆதி சங்கரர் எனவே இங்கு நிகழும் எந்தவொரு விழாவிலும் அவருக்கே முதன்மையான இடம் அளிக்கப்படுகிறது.

# வரம் தரும் குறிச்சி வழிவிடு பெரியநாச்சி அம்மன் கோவில்







சிவகங்கை மாவட்டம் இளையான்குடி வட்டம். குறிச்சியில் வரம் தரும் ஸ்ரீ வழிவிடு பெரியநாச்சி அம்மன் கோவில் உள்ளது. இக்கோவிலில் உள்ள அம்மன் பக்தர்கள் கேட்கும் வரங்களை தருவதாலும்  துன்பங்கள் நீங்க பெறுவதால் வழிவிடு பெரியநாச்சி அம்மனை ஏராளமான பக்தர்கள் வழிபட்டு வருகின்றனர்.

இங்கு நடைபெறும் சித்திரை பௌர்ணமி விழா சிறப்பு வாய்ந்தது ஆகும். அன்று பக்தர்கள் அக்கினி சட்டி, பூகரகம், அலகுகுத்தி பால்குடம் எடுத்து ஊர்வலம் வந்து வழிபடுவார்கள். இரவு வானவேடிக்கை வழிபாடு நடைபெறும்.

இக் கோவில் வளாகத்தில் காசியில் இருந்து பூஜித்து காசிவிஸ்வ நாதர், காசி நந்தி மற்றும் காசி துர்க்கை காசிகுருபகாவன் போன்ற சன்னதிகள் காசியில்ல் எப்படி உள்ளதோ அதேபோல் இங்கு அமைக்கப்பட்டு உள்ளது.

பக்தர்கள் ஆண்கள் பெண்கள் குழந்தைகள் இங்கு கங்கை தீர்த்தால் அபிஷேகம் செய்து சிவபெருமானை தொட்டு வழிபட்டு செல்லலாம்.

ஆண்டு தோறும் காசி கங்கை கரையில் முன்னோர் தர்பணம் திதி போன்றவை இக்கோவிலில் தை, ஆடி புரட்டாசி அமாவாசை தினங்களில் இங்கு நடைபெறுகிறது.



கோவில் கும்பாபிஷேகத்திற்கும் கங்கை தீர்த்தம் இலவசமாக வழங்கபட்டு வருகிறது. கோவில் பற்றியும், கும்பாபிஷேகத்திற்கு கங்கை நீர் தேவைப்படுபவர்களும் கீழே காணும் எண்ணில் தொடர்பு கொண்டால், கங்கை நீரைப் பெற்றுக் கொள்ளும் வழிமுறைகள் கூறப்படும், கங்கை நீர் தேவைப்படுபவர்கள் தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி எண்: 9444159653.

மானாமதுரை தெ.புதுக்கோட்டை வழியாகசெல்லும் பரமக்குடி செல்லும் சாலையில் குறிச்சி ஸ்ரீ வழிவிடு பெரிய நாச்சிஅம்மன் கோவில் உள்ளது.

நற்பவி என்று சொல்வோம் நன்மைகள் பல செய்வோம்

## சிவகங்கை மாவட்டம் இளையான்குடி வட்டம்

# குறிச்சி ஸ்ரீ வழிவிடுபெரியநாச்சி ஸ்ரீ காசிவிஸ்வநாதர் திருக்கோவில்




**கோவில் நிகழ்ச்சிகள் விபரம்**



| |
|---|
| 05.04.2023 பங்குனி உத்திர விழா அபிஷேகம் அன்னதானம் |
| 14.04.2023 தமிழ்வருட பிறப்பு சிறப்பு பூஜை தொடரந்து சித்திரை பௌர்ணமி விழா |
| 26.04.2023 காப்புக் கட்டுதல் |
| 03.05.2023 மாலை 4.30 மணி பிரதோஷ பூஜை, மாலை 6.00 மணி திருவிளக்கு பூஜை வழிபாடு |
| 04.05.2023 காலை 8 மணி அக்கினிசட்டி, பால்குடம் எடுத்தல், ஸ்ரீ பெரியநாச்சி அம்மனுக்கு அபிஷேகம் சிறப்பு பூஜை, மதியம் 1 மணி சிறப்பு அன்னதானம், இரவு வாண வேடிக்கை |
| 02.06.2023 வைகாசி விசாகம் விழா |
| ஆடி அமாவாசை, புரட்டாசி மாஹாளா. அமாவாசை தினங்களில் காலை 7 மணிமுதல் 12 மணிவரை முன்னோர்கள் தர்ப்பண பூஜை அன்னதானம் |
| ஐப்பசி அன்னாபிஷேகம், திருக்கார்த்திகை தீப விழா |

**கோவில் கும்பாபிஷேகத்திற்கு இலவசமாக கங்கை தீர்த்தம் வழங்கப்படுகிறது**
**தமிழகத்திலேயே காசி சிவனுக்கு கங்கை தீர்த்தம்**
**அபிஷேகம் செய்து பக்தர்கள் அனைவரும்தொட்டு வழிபடும் கோவிலாகும்.**




இறைபணியில்

**S.P.தேவர்**

**புபேஸ் ரியல் எஸ்டேட்**

22, பனகல் பார்க், சென்னை17

செல்: 9444159653,
9444638782, 9443020577,
9176242221 9566183703
வீடு 04423751097




aanmeegamalar.com

# மீனாட்சி அம்மன் பிறவிக்கு காரணமான
# வேம்பத்தூர் கைலாசநாதர்
# சிவன் கோவில்

மதுரை பட்டணத்தில் மணிபுரகத்தை தலை நகராக கொண்டு பாண்டிய நாட்டை ஆண்டு நல்லாட்சி புரிந்து மக்களை காத்து வந்த மலையத்துவஜ பாண்டிய மன்னர்க்கு குழந்தை பாக்கியம் வேண்டி சிவன் மீது தீவிர பக்தி கொண்டு சிவனடியார்களுக்கு தொண்டு செய்து வந்தார்.

மன்னரின் தொண்டில் மகிழ்ச்சி அடைந்த சிவனடியார்கள் புத்திரகாமேஷ்டி யாகம் நடத்தி அதன் பலனாக அன்னை பராசக்தியே உங்களுக்கு அவதரிப்பாள். என்று ஆசிவழங்கினார்கள்.

யாக ஏற்பாடுகளை செய்துவிட்டு யாகம் நடைபெறும் முன் கைலாயம் சென்று சிவனை தரிசிக்க மன்னரும் அவர் மனைவி காஞ்சனமலையுடன் யாத்திரையாக புறபட்டு சென்றனர்.

கால சூழ்நிலையால் இயற்கை சீற்றங்களால் யாத்திரையை தொடர முடியாமல் சிவனை மனதில் நினைத்து மனம் உருகி வேண்டினார்கள்.

அப்போது நூறு வயதை கடந்த முதியவர் தள்ளாடியபடி, "மனமே கைலாயம் சிவலிங்கத்தை ஏந்தி கொண்டு எங்கு நிற்கிறாயோ அதுவே கைலாயம்" என கூறியபடியே சென்றார்.

யாத்திரை செல்லும் வழியில், யாத்திரை நிறைவுபெறமால் விடுமோ என வருந்திய போது, "மனமே கைலாயம்" என, முனிவரின் வாக்கை கேட்டு மனமகிழ்ந்து, மன்னரும் அவரது மனைவியும், சிவலிங்கத்தை கையில் ஏந்தியபடி வேம்பற்றூர் என்னும் ஊரை அடைந்தனர்.

அங்கு ஈசான மூலை வரும்போது நின்றுவிட்டனர். அதன் பின் அவர்களால் செல்ல முடியவில்லை.

"மனமே கைலாயம்" மீண்டும் முனிவரின் குரல் மன்னரின் காதில் விழுந்தது. அந்த இடத்திலேயே, மன்னரும் தேவியரும் கைலாய தரிசன பலனை பெற்று மகிழ்ச்சி அடைந்து, யாத்திரையை நிறைவு செய்தனர்.

புத்திர காமேஷ்டி யாகம் அங்கு நடத்தி அங்கே கோவிலை அமைத்து, கைலாச நாதர் சிவனுக்கும், ஆவுடைய நாயகி அம்பிகைக்கும் திருநாமம் சூட்டி கோவிலை கட்டி, கும்பாபிஷேகம் நடத்தி வழிபட்டனர்.


அதன் பலனாக ஆதிபராசக்தி அங்கையற் கன்னி யாக அன்னை மீனாட்சியே அவதரித்து பல்வேறு திருவிளையாடல்களை நடத்தி மதுரையை அரசாட்சி செய்து மக்களை காத்து வருவது இன்று பக்தர்களால் நம்பபட்டு வருகிறது.

இவ்வளவு சிறப்புகளைப் பெற்ற இத்திருக் கோவில் சுமார் 88 ஆண்டுகளுக்கு பிறகு சிவனடியார்கள் வழங்கிய நன்கொடையால் திருப்பணிகள் செய்யப்பட்டு ஆவுடைய நாயகி சமேத கைலாசநாதர் திருக்கோவில் மகா கும்பாபிஷேகம் கடந்த (6.3.2022) ஞாயிறு அன்று நடந்தது.

இங்கு சிறப்பு அம்சமாக பிரம்மனுக்கு தனி சன்னதியும் கல்வி ஞானம் தரும் நவகிரங்களின் புதன் பகவான் வேறு எங்கு இல்லாத வகையில், சிம்ம வாகனத்தில் காட்சி தருகிறார்.

வேம்பத்தூரில் ஆயிரக்கணக்கான தமிழ் புலவர்களும், வேத பண்டிதர்களும் கைலாசநாதரை வணங்கி ஞானம் பெற்று சிறந்து விளங்கியுள்ளனர்.

இதை அறிந்த கம்பர், ஒட்டக்கூத்தர்,







காள மேகர், கபிலர், பரணர், வேம்பத்தூரில் அவதரித்த கவிராஜபண்டிதர் போன்ற சங்ககால புலவர்கள் பெரும் பேர் பெற்று புகழ் அடைந்தனர்.

80 ஆண்டுகளுக்கு முன்பு, பிறகளூரை சேர்ந்த சின்ன கருப்பன் அம்பலம் தனக்கு ஆண் குழந்தை வேண்டி, அதன் பலனாக இக்கோவிலை சீரமைத்து பல சன்னதிகளை உருவாக்கினார்.

அதன்பின் தற்போது பெரு முயற்சியோடு சிவபக்தர்களால் கும்பாபிஷேகம் நிறைவு பெற்று, தற்போது தினமும் மண்டல பூஜைகள் நடை பெற்று வருகிறது.

அன்னை மீனாட்சி தேவியே இங்கு அவதரித்த தால், இங்கு வந்து தரிசனம் செய்யும் பக்தர்களுக்கு கைலா யம் சென்று வந்த பலனும், வெகு நாட்களாக குழந் தை இல்லாதவர்களுக்கு குழந்தை பாக்கியம் கிடைத்தும் வரு கிறது.

பல கிராமங்களில் தற்போது கைலாசம், ஆவுடை யம்மாள் எனபெயர் உடைய வயதானவர்களை இங்கு காணலாம்.ஆவுடையநாயகி அம்பாள் சமேத கைலாசநாதர் திருக் கோவிலுக்கு மதுரை, சிவகங்கை ஆகிய ஊர்களில் இருந்து நேரடி பஸ் வசதி உள்ளது. மதுரை ராமேசுவரம் நான்கு வழி சாலையில் இருந்து திருப்பாசேத்தி வழியாக எளிதாக வேம்பத்தூரை அடைய லாம். மேலும் இத்திருக் கோவில் பற்றி அறிய 9790325083 எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.



aanmeegamalar.com

# கேட்டவரம் தரும் கரிசல்குளம் முத்துமாரி அம்மன் கோவில்



சிவகங்கை மாவட்டம், மானாமதுரையில் இருந்து மதுரைராமேசுவரம் பைபாஸ் சாலையில் அன்னவாசல் விலக்கு என்ற இடத்தில் இருந்து 5 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது எஸ்.கரிசல்குளம் கிராமம். இங்கு மனைவி ராக்குவுடன் வசிப்பவர் 90 வயதான லட்சுமணன் சுவாமி. இவரது இளம் வயதில் கனவில் வந்து அம்மன் அருள் கூறியதை இக்கிராம மக்கள் முக்கியமானதாக எண்ணுகின்றனர்.

சிறு வயது முதலே பராசக்தி தாய்க்கு சிறு பூஜைகளை செய்து வந்தார் லட்சுமணன் சுவாமி. பலமுறை கனவில் வந்த பராசக்தி ஊர் எல்லையில் உள்ள ஓர் இடத்தில் கல் கிடைக்கும். அதை எடுத்து வைத்து எனக்கு கோவில் கட்ட வேண்டும் என கூறி மறைந்தாள்.

அதன் பின் அருகே உள்ள வேறு ஊருக்கு சென்று குறி பார்த்தபோது கனவில் முத்துமாரியாக கல் தோன்றி உள்ளது. உடன் கனவில் கூறிய இடத்தை பார்வையிடும்படி குறி பார்த்த இடத்தில் கூறி உள்ளார்கள்.

கனவில் அம்மன் சொன்ன இடம் வேறொருவரின் நிலமாக இருந்தது. மிகுந்த தயக்கத்துடன் நில உரிமையாளரிடம் பேசினார். அவரும்

எந்தவித தயக்கமின்றி இடத்தை தோண்டி பார்க்க சொன்னபோது ஆச்சரியம் நடந்தது. கனவில் கூறியது போல் கருங்கல் கிடைத்தது. அதை தொடர்ந்து கனவில் கல்லாக தோன்றியது முத்துமாரி தான் என நம்பிய லட்சுமணன், அதை அங்கேயே பிரதிஷ்டை செய்து சிறு பூஜைகளை நடத்தி வந்தார். பிரதிஷ்டை செய்த மறுநாளே பல ஆண்டு காலமாக இருந்த தழும்புகள் பூரண குணமடைந்து குணம் பெற்றார் லட்சுமணன் சுவாமி.



அன்று முதல் பல ஆண்டு காலமாக கருங்கல்லாக கிடைத்த அம்மனை முத்துமாரியாக பொதுமக்கள் வணங்கி வருகின்றனர். கனவில் அம்மன் தோன்றி குணமடைந்ததை அறிந்த ஏராளமானோர் கரிசல்குளம் கிராமம் வந்து முத்துமாரியம்மளை வழிபட தொடங் கினார்கள். அன்று முதல் லெட்சுமணன்' சுவாமி மனைவி ராக்குவுடன் கோவிலில் தங்கி அம்மனுக்கு பூஜைகளை நடத்தி வருகிறார். குழந்தை பாக்கியம், தீராப்பகை பிரச்சினைகளையும் தீர்த்து வைக்கும் அம்மன் நினைத்த காரியங்களை உடனுக்குடன் நிறைவேற்றித் தருவதாக நம்பப்படுகிறது.

2011ம் ஆண்டில் முத்துமாரியம்மனுக்கு அழகிய சிலை வடித்து சுயம்புவாக வந்த கருங்கல் அருகேயே பிரதிஷ்டை செய்யப்பட்டு உள்ளது. தற்போது கும்பாபிஷேகம் திருப்பணிகள் தொடங்கப்பட்டு வரும்

வைகாசி மாதம் மகாகும்பாபிஷேகம் நடத்த திட்டமிடப்பட்டு உள்ளது . பங்குனி பொங்கல் விழா, ஏப்ரல் 4,5 ல் நடைபெறுகிறது. ஆடிமாதம் முளைப்பாரி, தீச்சட்டி ஊர்வலம் பிரசித்தி பெற்ற திருவிழாவாக நடத்தப்படுகிறது. கருங்கல்லாக அம்மன் கரிசல்குளம் கிராமத்தில் எழுந்தருளியதால் இன்றும் ஏராளமானோர் வழிபட்டுச் செல்கின் றனர். ஆலய

தொடர்புக்கு 9942345781

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை கேட்டவரம் தரும்

S.கரிசல்குளம் அருள்மிகு

# ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில்

## பங்குனி பெருந்திருவிழா

**ஏப்ரல் 6.4.2023 வியாழக்கிழமை**

**தீச்சட்டி எடுத்தல், பூக்கரகம், அன்னதானம்**

பக்தகோடிகள் குடும்பத்தாருடன் வருகைதந்து அம்மனின் அருள் பெற வேண்டுகிறோம்



### கேட்டவரம் தரும் அம்மனின் அற்புதங்கள்

* நீண்டநாள் குழந்தை பாக்கியம் இல்லாதவர்களுக்கு குழந்தை பாக்கியம் கிடைத்துள்ளது.
* கணவன், மனைவி நீண்டநாள் பிரிந்து வாழ்ந்தவர்கள் அம்மன் அற்புதத்தால் சேர்ந்து வாழ்கின்ற பாக்கியம் கிடைத்துள்ளது.
* கடன் பிரச்சினை தீர்த்து அருளாட்சி தருகிறது.
* திருமண தடைகள் நீங்கி திருமணம் நடைபெற்றுள்ளது.
* தொழில் வளர்ச்சியை கொடுத்து அற்புதம் நிகழ்த்தியுள்ளது.
* ஊமை பேசிய அதிசயம் நிகழ்ந்துள்ளது.
* பசுவின் மடுவில் உதிரமாக வந்ததை பாலாக மாற்றி அதிசயம் நிகழ்ந்துள்ளது.
* தீராத நோய்களை அம்மன் அற்புதத்தால் நீக்கியுள்ளது.

கேட்டவரத்தை அம்மன் கனவில் சென்று அற்புதம் நிகழ்த்திய காட்சி.

**பக்தர்களின் வேண்டுதல் நிறைவேறி உள்ளது.**

**மஹாகும்பாபிஷேக திருப்பணி, தேர், அன்னதான நன்கொடை அனுப்பலாம்**

SRI MUTHUMARI AMMAN TEMPLE TRUST
Ac/No.6823586631
IFSC code: IDIB000M266
Indian Bank, Manamadurai

பக்தகோடிகளும், வியாபார பெருமக்களும் குடும்பத்தாருடன் வருகை தந்து அம்மனிடம் வேண்டும் வரத்தை பெற்று சுபிட்சமாக வாழ வேண்டுகிறோம்.

பஸ் ரூட் : மானாமதுரை பஸ் நிலையத்திலிருந்து 7 கி.மீ. மாதா காலேஜ் வழி அன்னவாசல் புதூர் அருகில்
நேரம் காலை 9.00 மணி, மதியம் 12.00 மணி, மாலை 4.00 மணி, இரவு 7.00 மணி.



பெ.ராக்கு லெட்சுமண சுவாமிகள்
பரம்பரை டிரஸ்டி

: என்றும் இறைபணியில் :

## செர்டு சமூக சேவை நிறுவனம்


மானாமதுரை. Cell: 9942345781





# திருப்பம் தரும் திருகூடல்மலை





முருகனின் முதல்படை ஸ்தலம் திருப்பரங்குன்றம் அருகே உள்ளது புஜண்டர்மலை எனப்படும் திருகூடல்மலை உள்ளது.

இந்த மலையில் மானாமதுரை அருகே கட்டிகுளத்தில் அவதரித்த தவதிரு சூட்டுக்கோல் மாயாண்டி சுவாமி பிரதிஷ்டை செய்து வழிபட்ட நவநீதபெருமாள், ஸ்ரீ பால தண்டாயுதபாணி சுவாமி கோவில் உள்ளது.

தினமும் இங்கிருந்து ஸ்ரீசோமப்பா சுவாமி, ஸ்ரீ மாயாண்டி சுவாமி ஆகியோர் ஸ்ரீமீனாட்சிஅம்மன் யானைமலை யோக நரசிங்க பெருமாள் திருப்பரங்குன்றம் முருகனை தரிசித்து தங்களின் தவவலிமையால் பக்தர்களுக்கு பல்வேறு அற்புதங்களைபுரிந்து உள்ளனர்.

இங்கு சித்தர்கள் தவபுரிந்த குகை மற்றும் சித்தர்கள் ஜீவசமாதி கோவில்கள் உள்ளது.

இவை அனைத்தும் சூட்டுக்கோல் மாயாண்டி சுவாமி குருநாதர் சூட்டுக்கோல் ராமலிங்கம் சுவாமி நாமத்தில் ராமலிங்கம் விலாசம் என்ற பெயரில் திருகூடல்மலையில் கோவிலும் அடிவாரத்தில் சித்தர்கள் ஜீவ சமாதி கோவில் ஆஞ்சநேயர் பீடம், பசுமடம் உள்ளது.

மலையோறிசெல்ல படி, சாலை வசதி உள்ளது. தினமும் அன்னதானம் மற்றும் அமாவாசை பௌர்ணமி நாட்களில் சிறப்பு வழிபாடு பூஜை நடைபெறுகிறது.

திருகூடல்மலையில் சென்று சித்தர்கள் ஜீவசமாதி கோவிலில் வழிபாடு செய்து வரும் பக்தர்களுக்கு தங்களது வாழ்வில் திருப்பம் ஏற்படுவதாக கூறப்படுகிறது.

மேலும் ஆலயதகவல் பற்றி அறிய செல்9842124841.





| | | அமாவாசை | பௌர்ணமி | | கார்த்திகை | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | சனவரி | 21 | 6 | 6 | 3, 30 | 4, 19 | 8 | 10 |
| 02 | [illegible] | 20 | 5 | 5 | 26 | 3, 18 | 4 | 9 |
| 03 | [illegible] | 21 | 7 | 6 | 26 | 4, 19 | 3,31 | 11 |
| 04 | [illegible] | 19 | 5 | 5 | 22 | 3, 17 | 27 | 9 |
| 05 | [illegible] | 19 | 5 | 5 | 19 | 3, 17 | 24 | 8 |
| 06 | [illegible] | 17 | 3 | 3 | 16 | 1, 15 | 21 | 7 |
| 07 | [illegible] | 17 | 3 | 2 | 13 | 1, 15,30 | 18 | 6 |
| 08 | [illegible] | 16 | 1,30 | 1,30 | 9 | 13, 28 | 14 | 4 |
| 09 | [illegible] | 14 | 29 | 28 | 6 | 12, 27 | 11 | 3 |
| 10 | [illegible] | 14 | 28 | 28 | 3, 30 | 12, 26 | 8 | 2 |
| 11 | [illegible] | 13 | 27 | 26 | 26 | 10, 24 | 4 | 1, 30 |
| 12 | [illegible] | 12 | 26 | 26 | 24 | 10, 24 | 1,29 | 30 |





# மனகுறைகளை போக்கும் மடப்புரம் விலக்கு விசாலாட்சி விநாயகர்

விநாயக விரதங்களுள் சங்கரஹர சதுர்த்தி விரதம் தனி மகத்துவம் கொண்டது. ஒவ்வொரு மாதமும் பவுர்ணமியை அடுத்த நான்காம் நாள் தேய்பிறையில் வரும் சதுர்த்தி நாளை சங்கரஹர சதுர்த்தி திருநாள் என்பர். சங்கரஹர சதுர்த்தி விசேஷமாக அனுசரிக்கப்படும் பிள்ளையார் கோவில்களுக்கும் சென்று பிள்ளையாரை தரிசித்து நலம் பெறலாம். இப்படி சங்கரஹர சதுர்த்தி வழிபாடுகள் வெகு சிறப்பாக நடைபெறும் ஆலயங்களுள் சிவகங்கை மாவட்டம் திருப்புவனம் அருகே மடப்புரம் விலக்கில் அருள்பாலிக்கும் திசை மாறிய விசாலாட்சி விநாயகர் ஆலயம் குறிப்பிடத்தக்கதாகும்.பொதுவாக திசை மாறிய தெய்வங்களுக்கு அருள் பாலிக்கும் திறன் அதிகம் என்பார்கள். கிழக்கு நோக்கியே எல்லா விநாயகர்களும் இருப்பார்கள். ஆனால் இத்தலத்தில் விநாயகர் திசை மாறி தெற்கு முகமாய் அருள் பாலித்து வருகிறார்.

விசலாட்சி விநாயகர் எனும் பெயரோடு திகழும் இந்த பிள்ளையார் பெருமான் திருக்கோவிலுக்கு மதுரை பெரியார் பேருந்து நிலையத்தில் இருந்தும், மடப்புரம் காளியம்மன் கோவில் செல்லும் நகர பேருந்துகளில் சென்றால் மடப்புரம் விலக்கு தெற்குமுக விசாலாட்சி விநாயகர் கோவில் வாசலிலேயே இறங்கி கொள்ளலாம். இங்கு விசாலாட்சி ஜோதிட மந்திராலயமும் செயல்பட்டு வருகிறது. பார்க்க எளிமையாயினும் அருள் பொங்கும் அற்புத ஆலயமாக திகழ்கிறது. இந்த விசாலாட்சி விநாயகர் ஆலய கருவறையில் பாசம், அங்குசம், மோதகம், அபய முத்திரை தாங்கிய நான்கு திருக்கரங்களோடு உள்ளது.






ON LINE
ஜோதிடம்
★ பணம் தரும், கடன் தீர்க்கும் குபேர ஜாதகம் ரூ. 501
★ வசிய மூலிகை ரூ. 501 ★ வசிய யந்திரம் ரூ. 1001
★ தொழில் யந்திரம் ரூ. 1001 ★ ஏவல் யந்திரம் ரூ. 1001
★ கல்வி யந்திரம் ரூ. 1001 ★ திருமண யந்திரம் ரூ. 1001
★ நோய் தீர்க்கும் தன்வந்திரி யந்திரம் ரூ. 1001
உலகப்புகழ் "மாலைமுரசு" ஜோதிடர், பட்டிமன்ற நடுவர்
கரு.கருப்பையா
B.Sc., M.A., M.Phil., B.Ed., S.M.P.,
விசாலாட்சி ஜோதிட மந்த்ராலயம்
மடப்புரம் விலக்கு (ஆர்ச் எதிரில்)
விசாலாட்சி நகர்,
திருப்புவனம் - 630 611 (வழி) மதுரை
94431 65504, 95247 51504
YouTube
Jothidar Karukaruppiah
Karu Karu Siddha
Karu Karu Vishal
herbal mix karukaruppiah
தங்க நிற குபேர வசிய டாலர் ரூ. 501
aanmeegamalar.com




மாதம் இரண்டு முறை வெளிவரும் "ஆன்மிகமலர் மெயில் புத்தகம்"த்தை aanmeegamalar.com இணையதளத்தில் இலவசமாக படிக்கலாம்

160 க்கும் மேற்பட்ட இதழ்கள் உள்ளன





ஆசிரியர், வெளியீட்டாளர்
N.P.சந்திரன்
C.V. நடராஜன்
செல்: 9444228203

♦♦♦

முதன்மை செய்தியாளர்:
அழகுராஜா
செல்: 9994323622

♦♦♦

துணை ஆசிரியர்கள்
ஷியாம்சுந்தர்,
ஸ்ரீபதி, ஸ்ரீவர்ஷினி, சாய்,
குருபிரியா செல்: 9894595909
வேல் செல்: 9003199676

♦♦♦

வடிவமைப்பு
SML கிராபிக்ஸ்
செல்: 9444228203

நிர்வாக அலுவலகம்
aanmeegamalar.com
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு,
கோடம்பாக்கம், சென்னை 600024.


# மதுரை சித்திரை திருவிழா நாட்கள் விபரம்



ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோவிலில் வரும் ஏப்ரல் 23.4.23 ஞாயிறுக்கிழமை சித்திரை திருவிழா கொடியேற்றம். கற்பக விருக்ஷ, சிம்ம வாகனம்

| | |
|---|---|
| ஏப்ரல் 24 | திங்கள்கிழமை – பூத, அன்ன வாகனம் |
| ஏப்ரல் 25 | செவ்வாய்கிழமை கைலாச பர்வதம், காமதேனு வாகனம் |
| ஏப்ரல் 26 | புதன்கிழமை தங்க பல்லக்கு |
| ஏப்ரல் 27 | வியாழக்கிழமை – வேடர் பறி லீலை – தங்க குதிரை வாகனம் |
| ஏப்ரல் 28 | வெள்ளிக்கிழமை சைவ சமய ஸ்தாபித்த வரலாற்று லீலை – ரிஷப வாகனம் |
| ஏப்ரல் 29 | சனிக்கிழமை நந்தீகேஸ்வரர், யாளி வாகனம் |
| ஏப்ரல் 30 | ஞாயிறுக்கிழமை – ஸ்ரீ மீனாட்சி பட்டாபிஷேகம் – வெள்ளி சிம்மாசன உலாநிகழ்ச்சி |
| மே 01 | திங்கள்கிழமை ஸ்ரீ மீனாட்சி திக்விஜயம் இந்திர விமான உலா |
| மே 02 | செவ்வாய்கிழமை – ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கல்யாணம் விழா யானை வாகனம் , புஷ்பபல்லக்கு |
| மே 03 | புதன்கிழமை திரு தேர் – தேரோட்டம், சப்தாவர்ண சப்பரம் |
| மே 04 | வியாழக்கிழமை தீர்த்தம்; வெள்ளி விருச்சபை இரவு அழகர் மலையில் தங்க பல்லாக்கில் புறப்படும் ஸ்ரீ கள்ளளழகர் இரவு தல்லாகுளத்தில் எதிர் சேவை |
| மே 05 | வெள்ளிக்கிழமை – அதிகாலையில் பச்சை பட்டு அணிந்து தங்ககுதிரை வாகனத்தில்ஸ்ரீ கள்ளழகர் வைகை ஆற்றில் எழுந்தருமும் விழா அன்று 1000 பொன்சம்பரத்துடன் – சைத்யோபசாரம் வண்டியூர் |
| மே6 | சனிக்கிழமை ஸ்ரீ கள்ளழகர் – வண்டியூர் தேனூர் மண்டபம் – சேஷ வாகனம் (காலை) – கருட வாகனம், பிற்பகல் – மண்டுக மகரிஷி மோட்சம் தருதல், (இரவு) தசாவதார காட்சி இடம்: ராமராயர் மண்டபம் |
| மே 07 | ஞாயிறுக்கிழமை (காலை) மோகனாவதாரம் – (இரவு) கள்ளழகர் திருக்கோலம் புஷ்ப பல்லக்கு – மைசூர் மண்டபம் |
| மே 08 | திங்கள்கிழமை கள்ளழகர் அழகர்மலைக்கு வழிஅனுப்பும் விழா. |


ஏப்ரல்23ந்தேதி தொடங்கும் மதுரை சித்திரை திருவிழா மே 8 ந்தேதிவரை நடைபெறும் இந்த சித்திரை விழாதமிழகத்தில் பெரிய திருவிழாவாகும்.

இதேபோல் மானாமதுரை, பரமக்குடி, சோழவந்தான் ஆகிய ஊர்களிலும் சித்திரை திருவிழா நடைபெறுகிறது.

# உலகை அச்சுறுத்தும் கொடிய நோய்க் கிருமி, நோய்களை போக்கும் சமயபுரம் மாரியம்மன்

திருக்கடையூரில் எமனிடம் இருந்து தன்னைக் காப்பாற்றிக்கொள்ள நினைத்த மார்க்கண்டேயர் சிவபெருமானிடம் சரணடைந்தார். ஈசனும் காலசம்கார மூர்த்தியாக அவதாரம் எடுத்து எமதர்மனை அழித்தார். இது உலகில் ஜனன மரணத்தில் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியது.

இந்த மாற்றத்தை பயன்படுத்தி, நோய்களின் அதிபதியான மாயாசுரன் பல்வேறு நோய்களைப் பரப்பினான். நோய்க் கிருமிகள் மூலம் மக்களைத் துன்புறுத்தினான். இதைக் கண்டு கோபம் கொண்ட பார்வதி தேவி தன் வடிவமான மாரியம்மனை மாயாசுரனை வதம் செய்ய அனுப்பினாள்.



மாரியம்மன் மாயாசுரனையும், அவனது சகோதரர்களையும், வதம் செய்தாள். பின்னர் அவர்களின் தலையை ஒட்டியாணமாக அணிந்து நோய்களின் கொடுமைகளிலிருந்து மக்களைக் காப்பாற்றி அருள் புரிந்தார்.

பின்பு ஈசனின் அருளுடன் தனது தலைமையன் ஸ்ரீரங்கநாதர் திருக்கோயிலில் முதலில் "வைஷ்ணவி தேவி"யாக அமர்ந்தாள். பின்னாளில் சமயபுரத்தில் வந்து மாரியம்மனாக வீற்றிருக்கிறாள். மாரியம்மன் தனது எட்டுக் கரங்களில் இடப்புறமாக கபாலம், மணி, வில், பாசம், வலப்புறமாக கத்தி, சூலம், அம்பு மற்றும் உடுக்கை ஆகிய ஆயுதங்களைத் தாங்கியுள்ளாள். இடதுகாலை மடக்கி வைத்து வலது காலை தொங்கவிட்ட நிலையில் மாயாசுரனின் தலைமீது கால் பதித்து, அமர்ந்து பக்தர்களின் குறைகளை தீர்த்து வருகிறாள்.

நோய்களின் அதிபதியான மாயாசூரனையே ஒட்டியானமாக மாற்றி அணிந்த சமயபுரம் மாரியம்மனை வணங்கினால், கொடிய நோய்கள், வைரஸ் கிருமிகளின் பாதிப்புகளிலிருந்து விடுபடலாம். நோய்களின் தாக்கத்தால் அவதிப்படுபவர்களின் முதன்மை தெய்வம் சமயபுரம் மாரியம்மன்.




aanmeegamalar.com

# தாயும் மகளுமாக காட்சிதரும் ஸ்ரீ பாலாதிரிபுரசுந்தரி சமஸ்தான கோவில்

ஆதி சக்தியான ஸ்ரீ மாதா லலிதா திரிபுரசுந்தரியிலிருந்து தனக்கு தானே மகளாய் தோன்றியவளே ஸ்ரீ பாலா திரிபுர சுந்தரி இருவரும் ஒன்றே, இருவருக்கும் அணு அளவும் பேதமில்லை.

நவகோடி சித்தர்கள் தலைவியும், குல தெய்வமான வாலை எனும் ஸ்ரீபாலா திரிபுரசுந்தரி பலத்தலங்களில் நின்ற கோலத்தில் இருகரங்களுடன் எழுந்தருளியிருந்தாலும், ஆதி பராசக்தி குழந்தை பருவதிருமேனியாக, பாலாவின் தியான அமைக்கப்பட்ட சுலோக முறைப்படி சிற்ப ஆகம் சாத்திரப்படி மூலவர், உற்சவராக நான்கு திருக்கரங்களுடன் மேற்கைகளில் புத்தகம் ஜபமாலை, கீழ்கரங்களில் அபயவரத முத்திரையுடன் தன் பிஞ்சுக்கரங்களாலும், கொஞ்சும் சலங்கை ஒலியால், எட்டுவயது சிறுமியே கருவறையில் கொஞ்சும் சிரிப்போடு, சூரிய சந்திரபிறை நெத்திசுட்டி, புல்லாக்கு, லோலாக்கு அணிந்து, முன் போட்ட பின்னல் சடையுடன், பட்டு பாவாடை, சட்டை அணிந்தவளாக பத்ம பீடத்தில் அமர்ந்த திருமேனியாய் எழுந்தருளியுள்ளாள். குட்டி லலிதையாக சின்னஞ்சிறுமியாக மூலவர் திருமேனியாய திருக்கோலத்தில் எழுந்தருளியுள்ளாள்

மயிலாப்பூர் கற்பகாம்பாளின் ஆத்ம பக்தரான ஆறுமுக வாமதேவசிவம் ஐயா கனவில் குழந்தையாக பல முறை காட்சிதந்து, பல லீலைகள் புரிந்தாள். குருபீடம் 'போரூர் விடோபா சிவராமலிங்க சுவாமிகள் ஸ்ரீமத் சிதம்பர சுவாமிகள் அண்ணாமலை சேஷாத்ரி மகான், காஞ்சி மகா பெரியவர் போன்ற ஞானிகளின் அருளாசி அனுபவத்தால் தனது சொந்த இடத்திலேயே முதலில் அம்பாள் படமாகவும், பிறகு 1982ல் ஸ்ரீபீடத்தில் பாலா சிலை பிரதிஷ்டை செய்து சிறிது சிறிதாக வளர்ந்து 2009ல் ஸ்ரீபீடம் ஸ்ரீபாலா சமஸ்தானமாக அன்னையின் அருளால் ஸ்ரீபாலாவிற்கான தனி ஆலயமாக திகழ்கிறது.

அகிலாண்ட கோடி ப்ரஹ்மாண்ட நாயகியாகிய மஹாத்ரி புரசுந்தரி, தன்னுடைய சாமானிய பக்தர்களுடைய மேன்மைக் காக எளிதில் மிகுந்த வாத்சல்யத்துடன் எடுத்த குழந்தை வடிவமே பாலா திரிபுரசுந்தரி.

ஓர் அரசியிடம் பழகும் பொழுது, பயம் கலந்த பக்தி இருக்கும், ஆனால் குழந்தையிடமோ அப்படி கிடையாது. அன்பு மிகுந்து இருக்கும். தன் பக்தர்களிடம் மிகுந்த வாஞ் சையுடன் உரிமையோடு விளையாட வந்த தெய்வம்: பக்கத்தில் வந்தமர்ந்து நம் குறைகளை கேட்டு துயர் தீர்க்கும் தெய்வம்! கூப்பிட்ட குரலுக்கு ஓடி வரும் தெய்வம்!

ஒரு தாய் தான் குழந்தையிடம் காட்டும் பாசத்திற்கு பெயர் வாத்சல்யம். இங்கோ அந்த ஜகன்மாதாவே குழந்தை வடிவம் ஏற்று பக்தனை ரக்ஷித்து கோயில் கொண்டாள். ரக்ஷிக்க மட்டுமா வருகிறாள்? பக்தனுடைய கள்ளம் கபடமற்ற பக்தியை ருசிக்க வருகிறாள்.

இந்த பாலையினுடைய பிஞ்சு பாதங்களை பிடித்து கொண்டாள் போதும், இல்லாமை என்பதே நம் வாழ்க்கையில் கிடையாது. சௌபாக்கியத்திற்கு குறைவே இருக்காது. இவளுடைய லீலா விநோதங்களுக்கு அளவேயில்லை.

பக்தனே, ஒரு நல்ல குருவிடம் சென்று, குரு சேவையில் ஈடுபட்டு பாலா த்ரிபுரசுந்தரியின் உபாஸனையை பெற்றுக்கொள், ஸ்ரத்தையாக குரு வாக்கியம் தவறாமல் பாலா த்ரிபுரசுந்தரியை நித்தம் உபாசித்து வா. பாலையின் அருள் இருந்தால் பிரம்மன் எழுதிய தலையெழுத்தும் மாறும் அவள் அருளால் இந்த ஜன்மாவில் நீ ஸ்ரீ ப்ராப்தியை அடைந்து சௌபாக்கியமானாக திகழலாம்!!!



சென்னைக்கு மிக அருகில் அமைந்துள்ள (OMR) திருப் போரூர் செங்கல்பட்டு சாலையில் செம்பாக்கம் கிராமத்தில் தானே வந்தமர்ந்த குழந்தை தெய்வமாய் சாமானிய பக்தர்களின் இந்த ஜென்மாவில் மூன்று எழுத்து மூலமந்திரத்தை கொண்ட ஞானப்பிரதாயினியாக குழந்தைகளுக்கான பிரசித்தி பெற்ற வழிபாட்டு தலமாக திகழ்கிறது.

**ஸ்ரீபாலாவின் குருமண்டல அசாத்ய ஸ்ரீசக்ரம்**: காஞ்சி புரத்தின் இரண்டாவது ஆவரண எல்லையான செம்பாக்கத்தில் சகல செல்வ யோகம் மிக்க பெருவாழ்வு தரும் ஸ்ரீ பாலாதிரிபுரசுந்தரி முன் அபிராமி அந்தாதியின் 97.வது பாடலான ஆதித்தன், அம்புலி, அங்கி குபேரன் என தொடங்கும் அந்தாதி பாடலில் கூறப்பட்ட ஸ்ரீவித்யா குருமார்கள் ஸ்ரீமாதா லலிதையை உபாசனை செய்து வழிபட்டதால் அசாத்திய அற்புதங்களை பெற்று சாதித்த புண்ணியர்களான சூரியன், சந்திரன், அக்னி, குபேரன், இந்திரன், மன்மதன், பிரம்மன், விஷ்ணு, ருத்திரன் அகத்தியர், திருமூலர், கணபதி, முருகன் ஆகியோர் சூழ, ஆயிரம்கோடி சூரியன் போல ஜுவாலிப்பதும்

கோடி சந்திரனை போல் குளிர்ச்சியையும் உள்ள ஸ்ரீசக்கரமும் அதனிடையே ஜகத்தை உய்விக்கும் லோக மாதாவாக அருள் பாலிக்கிறாள்.

பிரம்மா விஷ்ணு ருத்திர சொருபிணியும், கருணைத் ததும்பிய கடைக்கண் உள்ளவளும், சாக்ஷாத் காமாட்சி தேவியாக ஸ்ரீ லலிதா திரிபுரசுந்தரி அமர்ந்த திருக்கோலத்தில் ஸ்ரீசக்ர சொரூபமாக அசாத்ய ஸ்ரீசக்ரம் பிரதிஸ்டை செய்யும் சமயத்தில் காஞ்சி மகா சுவாமிகள் தன் காலத்திலேயே பாலா ஆலயம் அமைக்க ஆவல் கொண்ட மாதவன் ஐயர் மூலம் வருங்காலத்தில் காஞ்சியின் கிழக்கு ஆவரண எல்லைக்குட்பட்ட பகுதியான செம்பை பாலாதிரிபுரசுந்தரி ஆலயத்தில் ஸ்ரீசக்ர யந்திரம் காஞ்சி மகாசுவாமி அருளால் பிரதிஷ்டையாகியுள்ளது.

**விஸ்வரூப மூலிகை அம்பாள் ஸ்ரீமத் ஔஷத லலிதா மகா திரிபுரசுந்தரி**: இந்நூற்றாண்டின் முதல் மூலிகை திருமேனியாக பலநூறு வருடங்களுக்கு பிறகு ஸ்ரீ பாலா சமஸ்தான ஆலயத்தில், 9 அடி உயரத்தில் மூலிகைஅம்மன் சிலை பிரதிஷ்டை செய்யப்பட்டு வழிபாடு நடத்தப்படுகிறது. இந்த அம்பிகையை வணங்கினால் நோயற்ற வாழ்வு தருவாள் என்பது பக்தர்களின் தீராத நம்பிக்கை.



இந்த திருமேனி செய்ய 64மேற் பட்ட மூலிகைகள், மரப்பிசின், மரப்பட்டைகள், இலைகள் மற்றும் வேர்களில் இருந்து தயாரிக்கப்பட்ட மூலிகை சாந்தால் கொண்டும். (இரசாயனப் பொருட்கள் ஏதும் இல்லாமல்) உருவாக்கப்பட்டுள்ளது.

பாணலிங்கங்கள். சாளகிராமங்கள், வலம்புரி சங்குகள், நவரத்தினங்கள், ஸ்ரீசக்கரங்கள் இடம்பெற்றுள்ளன. சிற்ப ஆகம ஆராய்ச்சியாளர் அம்பாள் ஸ்தாபகரும், ஸ்தபதியும், ஸ்ரீவித்யா உபாசகர், சுவாமிஜி இராஜசேகர இளம்பூரண சிவம் சர்யானந்தர்) அவர்கள் வளர்பிறை காலங்களில் பலஆயிரமாயிரம் முறை மூலமந்திர ஜபம் செய்து உருவேற்றி சுமார் 8 ஆண்டுகள் ஆண்டுகள் கடின உழைப்பில் லலிதாம்பிகை திருமேனியை வடிவமைத்து உலகமுய்ய சுவாமிகள் தந்தருளியுள்ளார்கள்.



தாந்திரீக முறையில் இந்த அம்பிகை மந்திர, யந்திர, தந்திர, அஸ்திர, சஸ்த்திரம் என்ற முறையில் அமையப்பெற்றவள் ஆவாள். திதி நித்யா தேவதைகளை வளர்பிறை தேய்பிறை படிகளாகக் கொண்ட ஆலயத்தின் மேல்தள மாடியில் உள்ள கருவறையில் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. நின்ற கோலத்தில் அங்குச, பாசம் இரண்டும் பிரயோகத்தில் இருக்க, கீழ்க்கையில் புஷ்பபாணம், கரும்பு வில் ஏந்தி அம்பிகை மகா சௌந்தர்ய ரூபத்துடன் ஒன்பது அடி உயரத்தில் நின்ற திருக்கோலத்தில் மொழிக்கும் நினைவுக்கும் எட்டா பராசக்தி விஸ்வரூபத்தில் அருள்பாலிக்கின்றாள்

**மூலிகை அம்மனுக்கு அபிஷேகம் கிடையாது.தினசரி பாதபூஜை மட்டுமே**: குழந்தைகள் நலன் பொருட்டு தாய் மருந்து உண்பது போல கலிதோஷத்தை நீக்கி சவுபாக்கியம் ஆனந்தம் ஆரோக்கியம் தந்திட நம் நலன் பொருட்டு மகாசக்தி சித்த மருத்துவச்சியாக அனுக்கிரகம் புரிகின்றாள். நோயற்ற வாழ்வு பெறுவதே இந்த அம்பிகையின் தரிசன பலனாகக் கூறப்படுகிறது. இந்த ஔஷத லலிதாம்பிகை கோவில் கொண்டிருக்கும் சன்னிதி "ஸ்ரீசக்ர ராஜசபை" என்று போற்றப்படுகிறது. ஏனென்றால் இங்கு அம்பிகை வாராகி மாதங்கி ஸ்ரீசக்ரமகாமேரு உடன் பரிவாரங்களுடன் தர்பாரில் கோலோச்சி பரிபாலனம் செய்வதாக ஐதீகம். ஹரி, ஹரன், அம்பிகையை வழிபட்ட பலனைத்தரும் மும்மூர்த்தி சொரூபிணியாக திகழ்கிறாள். அம்பாள் ஆஞ்ஞையாலும், குருநாதர்களின் வழிகாட்டுதலாலும் மூலிகை திருமேனி பற்றிய ஆய்வுகள் செய்து சித்தர்களின் முறைப்படி குண்டமண்டலங்கள் அமைத்து வேள்விகள் செய்து வளர்பிறை காலங்களில் மட்டுமே இத்திருமேனி அமைக்கப்பட்டது. இத்தகைய பேரழகும் பெருமைக்குரிய மகாசக்தியாக ஸ்ரீவாஞ்சா. ஸ்ரீபராபட்டாரிகா, சர்வலோக மஹாராணி ஸ்ரீமத் ஔஷத திரிபுரசுந்தரி அங்க உபாங்க ப்ரத்யங்க தேவியர்களோடு அமைக்கப்பட்ட ஸ்ரீவித்யா தந்திர ஆலயம்.



**ஸ்ரீ தருணீ மகா திரிபுர சுந்தரி (மனோன் மணி குமரிப்பருவம்)**: இச்சாசக்தி அம்சமாக வீற்றிருப்பவள். பஞ்சதசாக்ஷரி வித்தையே ஸ்ரீதருணீதிரிபுரசுந்தரி, கருவறை விட்டே வெளியே வராமல் சிவத்தே கலக்கும் பொருட்டு அருளே அழகாகி கல்யாணசுந்தரி, குலசுந்தரியாக நமக்கு திருமணப்பேறு தருபவளாக தருணீ அம்பிகையாக செம்பொன் திருமேனியுடன் நின்ற திருக்கோலத்தில் அங்குசபாசம் அபயவரத முத்திரையுடன் எப்போதும் சர்வ அலங்காரத்தில் வீற்றிருப்பவள். இவ்வம்பிகை நவசக்தி அம்சமாக திரிபுரா, திரிபுரேசி, திரிபுர சுந்தரி, திரிபுர வாசினி, திரிபுராஸ்ரீ, திரபுரமாலினி, திரிபுர சித்தா, திரிபுராம்பா, மகா திரிபுர சுந்தரி நவயோக நவசக்கரங்களை தன்னகத்தே கொண்டுள்ளாள் தருணீ மகாதிரிபுரசுந்தரி.

**ஸ்ரீ மகா வாராகி, ஸ்ரீஇராஜமாதங்கி**: ஸ்ரீமத் லலிதையின் சேனாதிபதி ஸ்ரீ மகா வாராகி தேவியும் ஸ்ரீஇராஜமாதங்கி தேவி எனும் சியாமளா தேவியும் வேறெங்கும் காண இயலாத அஷ்டபுஜ மூர்த்தியாக மூலவர் மற்றும் உற்சவராக எழுந்தருளியுள்ளாள். ஸ்ரீமத் ஔஷத லலிதாம்பாள் மூலிகை அம்பாள் எதிரில் மேற்கு பார்த்தவாறு ஸ்ரீமகா சிவகாமேஸ்வர சுவாமி ஸ்படிக சிவலிங்கத்திருமேனி பிரதிஷ்டையாகியுள்ள சதாசிவபீடம். மூலிகை அம்பாளை தரிசிக்க 15 திதி நித்யா படி ஏறி லலிதையை தரிசித்து எதிர்படி வழியே இறங்க வேண்டும். மூலிகை அம்பாள் தரிசனம் செய்ய ஆண்கள் கட்டாயம் சட்டை பனியன் கழற்றி விட்டு செல்ல மட்டுமே அனுமதிக்கப்படுவர். இத்தலத்தில் பச்சை கற்பூர ஆரத்தி மட்டுமே நடைபெறும். தினசரி இரண்டுகால பூஜை நடைபெறும். தினமும் ஆலய தரிசன நேரம்: காலை 8.00–1,00 மணி வரை, மாலை 4.30–8.00 மணி வரை தரிசித்து சகல செல்வ யோகம் மிக்க பெருவாழ்வு பெருக. ஆலய தொடர்பு எண்: 97899 21151.


யாமிருக்குமிடத்தில் வித்யா ஞானம், ஐஸ்வர்யம், சௌபாக்யம், ஆரோக்யம், ஆனந்தம் பெருகும்
SRIPEEDAM.COM
அருள்மிகு ஸ்ரீபாலா திரிபுரசுந்தரி (மூலவர்)
ஸ்ரீமத் ஔஷத லலிதா மகா திரிபுரசுந்தரி (விஸ்வரூப மூலிகைஅம்பாள்) திருக்கோயில்,
செம்பாக்கம் கிராமம், திருப்போரூர் அருகில், செங்கல்பட்டு மாவட்டம்–603108.
ஆலய தொடர்பு எண்: 97899 21151

விருதுநகர் மாவட்டம் வெம்பக்கோட்டை தாலுகா துலக்கன் குறிச்சியில்
எழுந்தருளி பக்தர்களுக்கு வேண்டிய வரங்களை தந்து அருள்பாலித்துவரும்

# அருள்மிகு வாழைமர பாலசுப்பிரமண்ய சுவாமி

## ஆலயத்திற்கு அன்புடன் அழைக்கிறோம்

உலக நன்மைக்காக தினந்தோறும் யாகம்,
திருமணம், குழந்தை வரம் வேண்டும்
பக்தர்கள் தங்கள் மனகுறை நீங்க
**தங்கள் கைகளாலேயே**
**யாகம் செய்யலாம்**



**பங்குனி உத்திரம்**
**5.4.2023 புதன்கிழமை**

பக்தகோடி பெருமக்கள்
அனைவரும் வருகை தந்து
அருள்மிகு வாழைமர
பாலசுப்பிரமண்ய சுவாமியின்
அருள் பெற்று மகிழ்க

வேந்தர் டி.வி.யில் நம் வாழைமர
பாலசுப்பிரமண்ய சுவாமி திருக்கோயில்
முருகனின் தரிசனத்தைக் கண்டு மகிழுங்கள்

ஆலயத்தின் சிறப்பு விசேஷங்கள் அனைத்தும்
www.youtube.com/MATRIMONYTV மற்றும்
www.matrimonytv.com இணையதளத்தில்
நேரடி ஒளிபரப்பு செய்யப்படுகிறது.
நிகழ்ச்சியை கண்டு முருகனருள் பெறுக

தொடர்புக்கு: விழாக் குழுவினர் 9840545860 / 91-8124245573

aanmeegamalar.com

# இறந்த மணமகனை உயிருடன் மீட்ட வாழைமர பாலசுப்ரமணியன்



எத்தனை துன்பங்கள் நம் மனதில் இருந்தாலும் வாழைமர பாலசுப்ரமணியனை பார்த்த மாத்திரத்திலேயே நொடிப்பொழுதில் காணாமல் போகும் படி வசீகரத்துடன் அருள்பாலித்து வருகிறார்.

இறைவனே தேடி வந்து குடியிருக்கும் கிராமம் தான் விருதுநகர் மாவட்டம் வெம்பக் கோட்டை அருகே உள்ள துலுக்கன்குறிச்சி என்ற சிறிய கிராமம். இக்கோவில் சிவகாசியிலிருந்து சங்கரன்கோவில், கழுகுமலை செல்லும் மெயின் ரோட்டில் அமைந்துள்ளது. சிவகாசியில் இருந்து 17 கிலோ மீட்டர் தூரமாகும்.

பெயர்க்காரணம்...

150 ஆண்டுகளுக்கு முன்னர் முருகப்பெரு மான் மீது அன்பும் ஆழ்ந்த பக்தியும் கொண் டிருந்த வேலாயுதம் என்ற பக்தருக்கு காட்சி கொடுத்து தான் வாழைமரத்தில் குடியிருப்ப தாக கூறி அருள்பாலிப்பதால் வாழைமர பால சுப்பிரமணிய சுவாமி எனஅழைக்கப்படுகிறது.

துலுக்கன்குறிச்சி கிராமத்தில் வாழ்ந்த தேரி யப்பர் வீரம்மாள் தம்பதிக்கு மகனாக பிறந்தவர் வேலாயுதம்.

இவர் தினமும் அதிகாலை வெம்பக் கோட்டை வைப்பாற்றில் குளித்துவிட்டு வனமூர்த்தி லிங்காபுரம் விநாயகர் கோவிலில் உள்ள முரு கனை தரிசித்துவிட்டு அன்றாட பணிகளை செய்வதையே வழக்கமாக கொண் டிருப்பார்.

வைத்திய முறை தெரிந்து வைத்திருந்தார். அங் குள்ள மக்களுக்கு வைத்தியம் செய்வதற்கு பணம் வாங்குவதில்லை. தர்ம சிந்தனையுடன் வைத்தியத்தின் மூலம் நோய் நீக்கியதால் மக்கள் பக்தியை கண்டு சித்தர் என்று போற்றினார்கள்.

வேலாயுதம் வழக்கம்போல் ஒருநாள்அதிகாலை எழுந்து வெம்பக்கோட்டை வைப்பாற்றில் குளித்து விட்டு முருகனை தரிசனம் செய்ய செல்லும்போது ஆற்றில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியதால் ஆற்றை கடக்க முடியாமல் போனது.

அதனால் முருகனை தரிசிக்க முடியாமல் தன் இல்லம் வந்து விட்டார். அன்று முழுவதும் வேதனையுடன் இருந்தார்.

இரவு முருகனின் திருநாமத்தை சொல்லிய வாறு கண் அயர்ந்த போது கந்தன் கனவில் வந்து வேலாயுதா என்னை காண எங்கும் செல்ல வேண்டாம். நானே உன்னை தேடி வந்து விட்டேன். நீ ஆசையாக பராமரித்து வரும் வாழைத்தோட்டத்தில் ஒரே ஒரு குலை தள்ளிய வாழை மரத்தில் மட்டும்தான் இருப்ப தாக சொல்லி மறைந்தார். மறுநாள் காலை வேளையிலும் குளித்து விட்டு தன்னுடைய தோட்டத்தை நோக்கி ஓடிச் சென்றார் மெய் மறந்து செய்வதறியாது திகைத்து நின்றார். காரணம் கனவில் முருகன் கூறிய படி குலை யுடன் வாழை மரம் இருந்து அதிசயம்கண்டு மனமுருகி வேண்டி நின்றார். இச் செய்தி பரவிய தால் வாழைமரத்தை பக்தர்கள் வழிபட்டனர்.

ஒருமுறை செவல்பட்டி ஜமீன் அரண்மனையில் பிரதான கணக்கு பிள்ளையின் ஒரே மக னுக்கு திருமண விழாவுக்காக அந்த வாழை மரத்தை வெட்டி சென்றனர். ஆனால் வேலாயு தம் வாழை மரத்தை வெட்ட அனுமதிக்க மறுத்து விட்டார். இதனால் மணமகன் தானே நேரில் சென்று வாழை மரத்தை வெட்டிக் கொண்டு வருவதாக கூறி தோட்டத்துக்கு சென்றார்.

அவரிடமும் வேலாயுதம் தான் வாழைமரம் தர முடியாது



கோவிலுக்குள் நுழையும் தோரணவாயில்



கோவிலுள்ள பஞ்ச லிங்க சன்னதி



முருகனின் சிறப்புகளை கூறும்
சிற்பங்கள் மற்றும் ஓவியங்கள்

என்று உறுதியாக கூறினார். ஆனால் வேலாயுதம் சொல்வதைக் கேட்காமல் தன் கையில் இருந்த அரிவாளால் மரத்தை ஓங்கி வெட்டினான்.

அடுத்த கணம் வெட்டிய வாழையிலிருந்து ரத்தம் வெளி யேறி நாகமாக மாறி மணமகனின் காலை தீண்டியது. சிறிது நேரத்தில் மணமகன் இறந்துவிட்டான். கணக்குப்பிள்ளை அழுது புரண்டார். தன் மகனை காப்பாற்றுமாறு வேலாயு தம் காலில் விழுந்து கெஞ்சினார்.

என்னால் ஒன்றும் செய்ய முடியாது என்று முருகனிடம் கேளுங்கள் என கூறினார். நீங்கள் நினைத் தால் காப்பற்றலாம் என வேண்டினார்கள். வேலாயுதம் தன் கையிலிருந்த பிரம்பால் இறந்த மணமகன் மீது முருகா.. முருகா... முருகா.. என 3 முறை திருநாமத்தை கூறி விட்டார். உடனே ஒரு அதிசயம் நடந்தது,

இறந்த மணமகன் உயிர் பெற்றான். இதை கண்ட ஜமீன் தார் இந்த இடத்தில் வாழை மர பாலசுப்ரமணி யனுக்கு ஒரு கட்டிடம் அமைத்து கொடுத்தார். அதன்படி கோவில் அமைக்கப்பட்டது. கோவி லுக்கு வரும் பக்தர்களுக்கு வேலாயுதம் ஆசி வழங்கினார். அருள்வாக்கு கூறி அனை வருக்கும் நன்மைகள் செய்து வந்தார். இவரது காலத்திற்கு பின்பு அவருடைய மகன் தேரியப்பர் கோவில் திருப்பணியை செய்து வந்தார். ஒருமுறை ஏற்பட்ட திடீர் புயல் மழை நாள் வெள்ளத்தால் கோவில் இடிந்து போனது. இடிந்துபோன கோவிலை புதுப்பிக்கும் வண்ணம் சிறிய அளவில் கோவில் கட்டப்பட்டது.

தேரியப்பர் வாரிசுதாரர்கள் பிழைப்புக்காக வெளியூர் சென்று விட கோவில் பராமரிப்பின்றி சிதிலமடைந்து ஆண்டுக்கு ஒரு முறை வைகாசி விசாகம் தோறும்



பால்குடம் எடுத்து வழிபட்டு வருகின்றனர். வாயு மூளையில் உற்சவர் சிலை அழகாக வடிவமைக்கப்பட்டுள்ளது. கருவறையில் புன்னகை தவழும் முகத்துடன் நின்ற நிலையில் இடது கையை தொடையில் வைத்தபடி வலது கையில் அபய முத்திரை பின்னர் வாழைமரம் இருக்குமாறு அற்புத வடிவமைப்புடன் அமைக்கப்பட்டுள்ளது. எத்தனை துன்பங்கள் நம் மனதில் இருந்தாலும் வாழைமர பாலசுப்ரமணியனை பார்த்த மாத்திரத்திலேயே நொடிப்பொழுதில் காணாமல் போகும் படி வசீகரத்துடன் அருள்பாலித்து வருகிறார்.

இது திருமண தோஷம், புத்திர தோஷம் நோய்களை தீர்க்கும் நிவர்த்தி தலமாக அமைந்துள்ளது. திருமண தடை நீங்கவும் குழந்தை பாக்கியம் பெறவும் நோய்நொடி என்று பெருவாழ்வு வாழவும் சகல சவுபாக்கியம் உடன் வாழையடி வாழையாய் வாழ்வாங்கு வாழ்ந்த ஸ்ரீ வாழைமர பாலசுப்ரமணிய சுவாமி ஆலயம் வந்து வணங்கி வளமோடு வாழ்வோம்.

# வணங்குபவர்களுக்கு நல்வாழ்வு தரும் ஸ்ரீசுயம்பு வாழவந்த அம்மன்

இராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடி அருகே உள்ளது செல்லூர் கிராமம். விவசாயத்தை முழு தொழிலாக கொண்ட இக்கிராமத்தில் பலநூறு ஆண்டுகள் முன்பு கடும் வறட்சி ஏற்பட்டு விவசாயத்திற்க்கு தண்ணீரின்றி பிற ஊர்களுக்கு சென்று பிழைக்க லாம் என கிராம மக்கள் முடிவு செய்து ஊரை விட்டு கிளம்பினர்.

திடிரென குழந்தை ஒன்று அவ்வழியே வந்து "என்னை கவனிக் காமல் எங்கே செல்கிறீர்கள்" எனகூறி சில நிமிடங்களில் மறைந்தது.

சிறுமியை தேடிகொண்டிருந்த போது இடிமின்னலுடன் கனமழை பெய்து கண்மாய்கள் நிரம்பி விவசாயம் செழித்தது.

அதன் பின் கிராம மக்கள் நம்மை வாழவைக்க அம்மனே குழந்தை வடிவில் தோன்றிமறைந்ததாக செவிவழி செய்தியாக கூறப்படுகிறது.



அதைதொடர்ந்து செல்லூரில் சுயம்புவாக தோன்றிய ஸ்ரீ வாழவந்த அம்மனுக்கு கோவில் கட்டப்பட்டது.



இங்கு விநா யகர், முருகன்,சிவகாளி அம் மன் முத்துமாரியம்மன், சப்தகன்னியர்,பேச்சி அம்மன், சின்னகருப்பு, பெரியகருப்பு, நாகர் போன்றவையும் பிரதிஷ் டை செய்யப்பட்டுபூஜை கள் நடைபெற்று வரு கிறது.

சிவராத்திரி விழா, ஆடி, நவராத்திரி போன்ற விழாக்கள் நடைபெறுகிறது.

வணங்குபவர்களுக்கு நல்வாழ்வையும், வளங் களை தருவதால் ஸ்ரீசுயம்பு வாழவந்த அம்மன் கோவிலில் வழிபாடு செய்யும் பக்தர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு வாழவந்தாள், வாழவந்தான் என்று அம்மன் பெயரைசூட்டுகின்றனர்.

தமிழகத்தில் உள்ள அனைத்து ஊர்களில் வசிக்கும் ஏராளமானோர்க்கு செல்லூர் ஸ்ரீசுயம்பு வாழவந்த அம்மன் குலதெய்வமாகவும் உள்ளது. பரமக்குடியில் இருந்து செல்லூர் செல்ல அடிக்கடி பஸ்வசதி உள்ளது.




கீதா சமையல்

geetha samayal YouTube channel

ஆயிரம் சமையல் வீடியோக்கள் உள்ளன

# வாழ்வில் வளம் தரும் வாராகி அம்மன்



தஞ்சை பெரிய கோவிலில் வாராகி அம்மன் வழிபாடு சிறப்பு வாய்ந்தது. பெரிய கோவிலை கட்டிய மாமன்னர் ராஜ ராஜசோழன் போருக்குசெல்லும் முன்பு வாராகி அம் மனை வணங்குவதை வழக்கமாக வைத்திருந்தார். மாமன்னர் ராஜாராஜசோழன் இந்த அன்னையின் அருள் பெற்றுதான் எந்த செயலையும் தொடங்குவார். இங்கு வாராகி அன்னை தனி சன்னதி கொண்டு வீற்றிருக்கிறார். வாழைப்பழம் படைக்கலாம். மாலை நேரத்தில் வாராகி அம்மனுக்கு கிழங்கு வகைகளை படைத்து வழிபடுவது சிறப்பானது.

சப்தகன்னியரில் ஒருவரான வராகி அம்மன். திருமாலின் வராக அம்சமாக கருதப்படுகிறார். இவர் வராகமெனும் பன்றி முகத்தையும், எட்டு கரங்களையும் உடையவர். பின் இருகரங்களில் தண்டத்தினையும் கலப்பையையும் கொண்டவர். இவர் கருப்பு நிற ஆடையுடுத்தி சிம்ம வாகனத்தில் அமர்ந்திருக்கிறார்.

கலியுகத்தில் கண்கண்ட தெய்வமான வாராகியை வணங்கினால் பகைவரை அழித்து பக்தரை காத்திடுவாள். கொடிய ஏவல், பில்லி சூனியத்தில் இருந்தும் காப்பாற்றுவாள். நினைத்த காரியம் நிறைவேறும். திருமணத்தடைகள் விலகும், புத்திரபாக்கியம் கிடைக்கும்.

காசி நகரத்தில் வாராகி அன்னைக்கு மிகப்பெரியகோவில் உள்ளது. இங்குள்ள வாராகியை நேரடியாக தரிசிக்க முடியாது துவாரங்களின் வழியாகத்தான் தரிசிக்க முடியும்.

ஞாயிறு கிழமைகளில் வாராகியை வழிபட்டால் நோய்கள் தீரும். திங்கட்கிழமைகளில் வழிபட்டால் மன நல பாதிப்புகள் நீங்கும்.

வீடு நிலம் தொடர்பான பிரச்சினைகள் தீர செவ்வாய்கிழமைகளில் வராகியை வழிபடலாம். கடன் தொல்லைகள் தீர புதன்கிழமை வழிபடலாம். குழந்தை பேறு கிடைக்க வியாழக்கிழமை வழிபடலாம். கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கவும் வியாழக்கிழமை வழிபடலாம். வெள்ளிக்கிழமை வழிபட நினைத்த காரியம் நிறைவேறும்.

**அன்பான அன்னை வாராகி:** சப்த மாதர்களில் வாராகி அம்மன் உக்கிரமான தெய்வமாக பார்க்கப்பட்டாலும் அன்பை பொழிவதில் அன்னைக்கு நிகரானவள். வாராகி காயத்ரி மந்திரத்தை ஜெபித்து வணங்கினால் கேட்ட வரங்களை கொடுப்பவள்.வாராகி அம்மன் ராஜ ராஜேஸ்வரி அம்மனின் குதிரைப் படைத்தலைவியாகவும், பத்மாவதி அம்மனின் காவல் தெய்வ மாகவும், சப்தகன்னியரில் ஒருவராகவும் அறியப்படுகிறார்.

**அஷ்ட வாராகி:** மகா வாராகி, ஆதி வாராகி, ஸ்வப்ன வராகி, லகு வாராகி, உன்மத்த வாராகி, சிம்ஹாருடா வாராகி, மகிஷாருடா வாராகி, அச்வாருடா வாராகி என எட்டு வாராகிகள் அழைக்கப்படுகிறார்கள். இந்த எட்டு கோ யிலையும் உள்ளடக்கிய அஷ்டவராகி கோயில் சாலாமேட்டில் அமைந்துள்ளது. உலகிலேயே வராகியம்மனுக்கு அமைக்கப் பட்ட முதல் கோயிலாக கருதப்படுகிறது.

இதே போல் நாகப்பட்டினம் மாவட்டத்திலுள்ள வழுவூர் வீரட்டேசுவரர் கோயில் வராகி வழிபட்ட தலமாக உள்ளது. கடலூர் மாவட்டத்தில் உள்ள நெல்லிக்குப்பம் எனும் ஊரில் சப்தமாதாக்கள் கோவில் உள்ளது. இங்கு வராஹி அம்மனுக்கு பஞ்சமி திதியில் பூஜை மற்றும் மஹா யாகம் நடைபெறும்.


வேம்பத்தூர் ஸ்ரீகவிராஜ பண்டிதரின்
ஸ்ரீவராஹி பீடம் அறக்கட்டளை
2/26, பெருமாள் கோவில் தெரு,
வேம்பத்தூர் சிவகங்கை மாவட்டம்-630 565



சேவைகள் விபரம்:
ஜாதி மத பேதமின்றி கல்வியில் சிறந்து விளங்கும் மாணவ மாணவிகளுக்கு கல்வி உதவித் தொகை வழங்குதல், பொருளாதாரத்தில் பின்தங்கிய ஆதரவற்ற முதியவர்களுக்கு உதவி செய்தல், ஆலயங்களில் சேவை செய்யும் அர்ச்சகர்களுக்கு உதவுதல்.



SRI VKPVP CHARITABLE TRUST
Ac No:4164367792
IFSC No: SBIN0004898 Vembathur Branch
அணுகவும்: 9894142409
வேம்பத்தூர் வருக ஸ்ரீ கவிராஜபண்டிதர் ஸ்வாமி அருள்பெறுக

# மீனாட்சி அம்மன் திருக்கோவிலும் அற்புதத் தகவல்களும்











மதுரையில் அமைந் திருக்கும் மீனாட்சி அம்மன் கோவில் உலக புகழ்பெற்றது. தேவாரம் பாடல் பெற்ற தலம், திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசரால் பாடப் பெற்றது.

இங்கு கர்ப்பக்கிரகத்தில் அம்பாள் ஒரு கையில் கிளியை ஏந்தியபடி காட்சி தருகிறாள். மீன் போன்ற கண்களை பெற்றவர் என்பதால் மீனாட்சி என்று பெயர் வந்தது. பக்தர்களை அருட் கண்ணால் நோக்கி அருள்பாலிக்கிறாள்.

மீனாட்சியம்மன் திருக் கோலத்தில் கிளிக்கு முக்கிய இடம் உண்டு. பக்தர்களின் கோரிக்கையை அம்பிகைக்கு நினைவூட்டும் வகையில், கிளி திரும்ப திரும்ப சொல்லும் என்பது நம்பிக்கை.

இங்குள்ள மீனாட்சி அம்மன் சிலை மரகத கல்லால் ஆனது. எனவே மீனாட்சி அம்மன் பரகதவல்லி என்றும் அழைக்கப்படுகிறாள்.

சுயாமி சன்னதியில் இறைவன் சுந்தரேசுவரர் சிவலிங்க திருமேனியாக அருள்பாலிக்கிறார். இது கடம்ப மரத்தடியில் தோன்றிய ஒரு சுயம்பு லிங்கம்.

சுவாமி சந்நிதி பிராகாரங்களில் 64 திருவிளையாடல் காட்சிகள், சிற்பங்களாக செதுக்கப்பட்டு உள்ளன. சுந்த ரேசுவரர் சொக்க நாதர், சோமசுந்தரா" என்று பல்வேறு பெயர்களில் அழைக்கப்படுகிறார்.

மேருமலை, வெள்ளிமலை, திருக்கேதாரம்,வாரணாசி போன்ற தலங்களுடன் ஒப்பிடுகையில், இது பழம் பெரும் சிறப்புகளை உடையது. எனவே இதற்கு மூலலிங்கம் என்ற பெயரும் உண்டு, இதுதவிர அங்கயற்கண்ணி, தடாதகை, கோமளவல்லி, பாண்டியராஜ குமாரி, மாணிக்கவல்லி, சுந்தர வல்லி 'என்ற பெயர்களும் அம்ம னுக்கு உண்டு, ஈசனின் 64 திருவிளை யாடல்களும் மதுரையில் நடந்த தாக திருகல்யாண வரலாறுகள் தெரிவிக்கின்றன. மண்டபம் போன்றவை 15 ஏக்கர் பரப்பளவு கொண்டது. கிழக்குமேற்காக 847 அடியும், தெற்குவடக்காக 792 அடிகள் உடையது. இங்கு 8 கோபுரங்கள் உள்ளன. மீனாட்சி அம்மன் கோவிலின் ஆடி வீதியில் நான்கு திசைகளிலும் 9 நிலை களை உடைய 4 கோபுரங்கள் உள்ளன.

இதில் கிழக்கு கோபுரம் கி.பி. 1216 –1238 ஆண்டுளிலும், மேற்கு கோபுரம் கி.பி. 1323 ஆண்டிலும், தெற்கு கோபுரம் கி.பி. 1559 ஆண்டிலும் கட்டப்பட்டது. கோவிலின் வடக்கு கோபுரம் கி.பி. 1564–1572 ஆண்டில் கட்டப்பட்டதாக வரலாறு கூறுகிறது. மீனாட்சி அம்மன் கோவிலில் தெற்கு கோபுரம் மிகவும் உயரமானது. இந்த கோபுரத்தின் உயரம் 160 அடியாகும்.

கோவிலின் தலமரம்: கடம்பம், புளிதநீர், பொற்றாமரை குளம். சுமார் ஒரு ஏக்கர் பரப்பளவு உடைய இந்த குளத்தில் பல நூறு ஆண்டுகளுக்கு முன்பு கிடைத்த படிகலிங்கம், இன்றும் மதுரை ஆதீனத்தில் வழிபாட்டில் உள்ளது.

தமிழர்களின் சிற்பகலைக்கு எடுத்துக்காட்டாக கட்டிடக் கலை வடிவமைப்புடன் இருக்கும் மீனாட்சி அம்மன் கோவில், 3000 ஆண்டுகள் பழமைவாய்ந்தது.

மீனாட்சி அம்மன் கோவில் வளாகத்தில் இருக்கும் அஷ்டசக்தி மண்டபம், மீளாட்சி நாயக்கர் மண்டபம், முதலி மண்டபம், வாயுஞ்சல் மண்டபம், கம்பத்தடி மண்டபம், கிளிக் கூட்டு மண்டபம், மங்கையர்க்கரசி மண்டபம், இங்குள்ள சிற்ப வேலைப் பாடுகள் ஒவ்வொரு மண்டபத்திலும் தனித்




தன்மை வாய்ந்த அழகிய நுணுக்கங்களுடன் இருப்பது தனி சிறப்புவாய்ந்தது. அஷ்டசக்தி மண்டபம் இது மீனாட்சி அம்மன் சன்னதியின் முன்பகுதியை விளிக்கும் எட்டு சக்தி (அஷ்டசக்தி) மண்டபம்.

வாயிலில் விநாயகர், முருகன் உருவங்களுக்கு இடையே மீனாட்சி கல்யாணம் சுதை வடிவில் காட்சி அளிக்கிறது. மண்டபத்தில் உள்ள தூண்களில் 8 சக்தியின் வடிவங்கள் அழகுற வரையப்பட்டு உள்ளன.

கம்பத்தடி மண்டபம் இது சிவனின் பல்வேறு வடிவங்களை உடையது. இங்கு உள்ள மீனாட்சி திருக்கல்யாண சிற்பம் உலகப்புகழ்பெற்றது.

சுவாமி சன்னதி முன்பு உள்ள நந்தி மண்டபம் ஒரே கல்லால் ஆனது. அடுத்தபடியாக உள்ள மீனாட்சி நாயக்கர் மண்டபத்தை தாண்டி சென்றால், இத்தல இறைவி மீனாட்சி அம்மனின் சன்னதி.

ஆயிரங்கால் மண்டபம் இது கோவிலில் சுவாமி சன்னதி யின் இடப்புறம் உள்ளது. இது கோவிலில் உள்ள இத மண்டபங்களைவிட மிகவும் பெரியது. ஆயிரங்கால் மண்டப வாயிலின் மேல் விதானத்தில் தமிழ் ஆண்டுகள் அறுபதை குறிக்கும் வகையில், சக்கரம் செதுக்கப்பட்டுள்ளது.

இதுதவிர சிற்பங்கள் நிறைந்த 985 தூண்களை இங்கு பார்க்க முடியும்.

இந்த தூண்களை சேர்வைக்காரர் மண்டபம், எந்த கோணத்தில் நின்று பார்த்தாலும், ஒரே வரிசையில் மீனாட்சி அம்மன் கலையழகு மிகுந்த பகுதிகள், வியப்புக்கு உரியது. அமைந்திருக்கும் காட்சி

உயிரங்கால் மண்டபத்தில் இன்னிசை ஒலி எழுப்பும் 22 தூண்கள் உள்ளன. இது கோவில் அருங்காட்சியமாக மாற்றப்பட்டு, இங்கு பல்வேறு காலத்திய சிற்பங்கள், ஓவியங்கள், பாதக்கலை முத்திரைகள், இசைத்தூண்கள் போன்ற பல்வேறு சிறப்புகள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

ஆயிரங்கால் மண்டபம் கோவிலின் புதுமண்டபம் கோவிலின் கிழக்கு கோபுரத்துக்கு எதிரே, 124 சிற்பத் தூண்கள் அடங்கிய மண்டபம். இது தற்போது சிறு வணிக கடைகளாக மாற்றப்பட்டு விட்டது.

இசைத் தூண்கள் மீனாட்சியம்மன் கோவிலின் வடக்கு ஆடி வீதியில் கல்வில் இசைபாடும் 5 இசை தூண்களும், ஆயிரங்கால் மண்டபத்தில் 2 இசைத் தூண்களும் உள்ளன. மதுரை மீனாட்சியம்மன் கோவிலை தாமரை மொட்டு போல் உருவகப்படுத்தினால் அதை சுற்றியுள்ள தெருக்கள் தாமரை இதழை போன்றது.

மீனாட்சியம்மன் கோவிலுக்குள் இருப்பது ஆடி வீதி. இதனை தாண்டி கோவிலுக்கு வெளியில் இருப்பது சித்திரை வீதி, சித்திரை வீதிக்கு அடுத்தபடியாக இருப்பது ஆவணி வீதி. அதனை தாண்டி வெளியே வந்தால் மாசி வீதி, அதையும் தாண்டி இருக்கும் தெருக்கள் வெளி வீதிகள் என்று அழைக்கப்படுகின்றன.

மீனாட்சி அம்மன் கோவிலின் தெருக்களுக்கு தமிழ் மாதங்களின் பெயர் வைக்கப்பட்டு இருப்பதற்கு ஒரு காரணம் உண்டு, புராண காலத்தில் மன்னர்கள் குறிப்பிட்ட மாதங்களில் நடக்கும் விழாக்களை, அந்த 'மாதங்களின் பெயர் உடைய தெருக்களில் தான் நடத்தி உள்ளனர்.

சிறப்பு விழாக்கள் மதுரை மீனாட்சியம்மன் கோவிலில் சிந்திரை திருவிழா, முடிசூட்டு விழா, திக்விஜயம், திருக்கல்யாணம், தேரோட்டம், புட்டு திருவிழா ஆகியவை சிறப்பாக கொண்டாடப்படுகிறது.




# பஞ்சம் போக்கி மக்களின் இடர்தீர்த்த

# இடைக்காடர் சித்தர் கோவில்

பதினெட்டு சித்தர்களில் ஒருவரான மகான் இடைக்காடர் சித்தர் 32 அறப்பணிகள் செய்து பல்வேறு அற்புதங்களை நிகழ்த்தி சிவனை வழிபட்டு திருவண்ணாமலையில் ஜோதியாக மறைந்து திருவண்ணாமலை வரும் சிவ பக்தர்களுக்கு இன்றும் அருள் ஆசி வழங்குகிறார். இடைக்காடர் சித்தர்

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை அருகே ராமேசுவரம் நெடுஞ்சாலையில் வைகை ஆற்றங்கரையில் உள்ளது இடைக்காட்டூர். இங்கு 2ஆம் நூற்றாண்டில் இடைக்காடர் தங்கி வாழ்ந்துள்ளார்.

அந்த சமயம், நவக்கிரகங்களின் தாக்கத்தின் காரணமாக தொடர்ந்து 12 வருடங்கள் பூலோகம் கடும் பஞ்சத்தில் இருக்கும் என்பதை அறிந்த இடைக்காடார், அந்த பஞ்சகாலத்தில் எப்படி வாழ்வது என்பதை முன்கூட்டியே சிந்திதார். இந்தக் காலகதியை வெல்ல ஒரு வழியையும் கண்டறிந்து வைத்திருந்தார்.



தன் குடிசையைப் புதுப்பிக்கும் போது, மண் சுவரோடு நெல்லைக் கலந்துவிட்டார். வீட்டைச் சுற்றிலும் நீரில்லா விட்டாலும் வளரும் எருக்கஞ் செடிகளைப் பயிரிட்டு அதை ஆடுகளுக்குத் தின்னக் கொடுத்துப் பழக்கிவிட்டார்.

இதனால், வறட்சி வந்து பூமண்டலமே கதறிய போதும் இடைக்காடரோ அவரது ஆடுகளோ துன்புறவில்லை. எருக்கந்தழையைத் தின்னும் ஆடுகளுக்கு நமைச்சல் ஏற்படும். உடனே மண்குடிசை சுவரில் சென்று உரசும். மண்ணோடு கலந்திருந்த நெல் இதனால் உமி நீங்கி அரிசியாகக் கீழ் விழும்.

இடைக்காடர் போகியல்ல, யோகி. அவருக்கு ஒரு கைப்பிடி அரிசி ஒருநாளைக்குப் போதும். அதைக் கொண்டு கஞ்சிகாய்ச்சிக் குடித்தார். ஆடுகளும் அவரும் அந்த வறண்ட காலத்திலும் அழகாக தப்பிக் கொண்டே இருந்தனர்.

நவக்கிரகங்கள் கொடுத்த தாக்கத்தில் பூமியே திண்டாடும் போது, இடைக்காடாரும், அவரின் ஆடுகளும், எந்த பஞ்சமும் இன்றி வாழ்ந்ததை அறிந்த நவகிரகங்கள், இதற்கான காரணத்தை அறிய முற்பட்டது.

மாற்று உருவம் ஏற்படுத்தி நவக்கிரகங்கள் இடைக்காடாரின் குடிசைக்குள் நுழைந் தனர். வந்திருப்பவை கோள்கள் தான் என்பதைத் தனது சித்தஞானத்தால் உணர்ந்து கொண்டார் இடைக்கடார்.

விருந்தாளிகளுக்கு உணவு படைப்பதுமரபு என்பதற்கினங்க உணவு தயாரிப்பு பணியை துவங்கினார், மாறுவேடத்தில் வந்த நவ கிரகங்கள் நடப்பவற்றை உன்னிப்பாக கவனித்துக் கொண்டிருந்தது.

முதல் காரியமாக ஆடுகளுக்கு எருக்கிலையை தின்னக் கொடுத்தார். இலையை உண்ட ஆடுகள் அரிப்பெடுத்து சுவர்களில் உரச, நெல்லின் கூடுகள் உடைபட்டு உமியும் அரிசியும் பிரிந்து விழுந்தன. அதை எடுத்து கஞ்சி காய்ச்சியவர், நவகிரகங்களுக்கு அதை வழங் கினார்.

அவர் செயலைப் பார்த்து கோள்கள் சற்று கூசிப் போயின. வறுமை, இல்லாமை போன்ற நிலையிலும் இடைக்காடரின் விருந்தோம்பும் பண்பு, அவர்கள் மனதில் அவர்பால் இருந்த எதிர்மறையான எண் ணங்களை அப்படியே மறையச் செய்தது.

உணவை உண்ட நவகிரகங்கள் உண்ட களைப்பில் ஓய்வெடுக்க ஆரம்பித்தனர். நவகிரகங்கள் அனை வரும் ஒரே திசையில் இருந்தால் எப்போதும் பஞ்சம் நிலவிவிடும் என இடைக்காடர் சித்தர் நவகிரகங்களை திசைதிருப்பி வைத்தார்.

பிறர் வாழ நினைக்கும் சன்யாசிகள் மனது வைத்தால் அவர்கள் வாழும் நாட்களை மட்டுமல்ல, கோள்களையும் மாற்றும் வல்லமை அவர்களுக்கு உண்டு என்பதை, இதோ கொட்டும் மழையைக் கொண்டு உலகுக்கு உணர்த்தி விட்டேன். கோள்களால், கர்ம வினைகளுக்கு உட்பட்டவர்களையே ஆட்டிப்படைக்க முடியும். அதை வென்று வாழ முற்படுபவர்களை ஒன்றும் செய்ய இயலாது என்பதை, இனிவரும் காலம் உணரட்டும்." என்று கூறினார்.

இடைக்காடாரின் செயலைப் பார்த்து நவகிரகங்களும், பஞ்சம் ஏற்படுத்தி மக்களை வதைத்ததை எண்ணி வருந்தி, இடைக்காடாருக்கு ஆசி வழங்கிச் சென்றனர்.

இன்றைக்கும் இடைக்காடர் சித்தர் எழுதிய பஞ்சாங்கம் நாடு முழுவதும் பார்க்கப்படுகிறது. பல்வேறு தோஷ நிவர்த்தி தலமாக இந்த இடைக்காடர் சித்தர் கோவில் உள்ளது.

இங்கு இடைக்காடருக்கு ஐம்பொன் சிலையும் இது தவிர விநாயகர், முருகன், நவகிரகங்கள் சன்னதியும் உள்ளது. இங்கு ஆண்டு தோறும் புரட்டாசி மாதம் திருவாதிரை நட்சத்திரத்தில் இடைக்காடர் ஜெயந்தி விழாவும் குரு பெயர்ச்சி, சனிபெயர்ச்சி, ராகு கேது பெயர்ச்சி விழாவும் நடக்கிறது.

பௌர்ணமி அன்று விஷேச பூஜை வழிபாடும் நடைபெறுகிறது. அனைத்து தோஷம் நீங்க இடைக்காடர் சித்தர் நவகிரக கோவில் உள்ளது. இடைக்காடர் சித்தரால் திசை மாறிவைத்து பிரதிஷ்டை செய்யப்பட்ட நவகிரகங்களை ஏராளமானோர் வழிபட்டு செல்கின்றனர்.

இடைக்காடர் சித்தரால் நவகிரகங்கள் அமிர்தம் பெற்ற பூலோக அமிர்தலோகமாக இடைக்காட்டூர் உள்ளது. இந்தியாவிலேயே நவகிரகங் களுக்கும் தனிக்கோவிலாக இடைக்காட்டூர் சித்தர் கோவில் உள்ளது.

# சகலசவுபாக்கியம் தரும் சதாசிவ பிரம்மேந்திராள்





மானாமதுரையில் பல நூறு ஆண்டுகளுக்கு முன்பு ஆண், பெண் உருவில் உள்ள ஸ்ரீ சதா சிவ பிரமேந்திராள் சன்னதி தற்போது புதிதாக முழுவதும் கருங்கற்களினால் கட்டப்பட்டு உள்ளது. மானச சஞ்சரே என்று பாடிய ஸ்ரீ சதா சிவ பிரம்மேந்திராள் என்ற மகான் ஒரே நேரத்தில் மானாமதுரை ஆனந்தவல்லி சோமநாதர் திருக்கோவில், ஓம்கார், வாரணாசி ஆகிய இடங்களில் மட்டும் ஓர் ஜோதி வடிவில் ஆனந்தவல்லி சோமநாதருடன் காட்சி அளித்ததாக கூறப்படுகிறது.

அவருடைய பூத உடல் ஜீவ சமாதி நெடூரில் உள்ளது. இங்குள்ள ஸ்ரீ சதா சிவ பிரம்மேந்திராள் ஜோதி ரூபத்தில் காட்சி அளித்த இடத்தில் பீடம் கோவில் அமைக்கப்பட்டுள்ளது. அதன் முன்பு மனமுருகி வழிபடுபவர்களுக்கு மன நிம்மதி கிடைப்பதோடு தீராத நோய்களும் நீங்குவதாகவும் நம்பப்படுகிறது.

ஆண்டு தோறும் வைகாசி மாதத்தில் மூன்று நாட்கள் இந்தியாவில் உள்ள அனைத்து இசை கலைஞர்களும் இசை ஆராதனை விழா நடத்துகின்றனர். புதிதாக இசை கற்பவர்கள் இங்கு வந்து வழிபட்டால் இசை பயிற்சியில் கலந்து கொண்டு ஏராளமானோர் புகழ் அடைந்து உள்ளனர். உலகம் முழுவதிலும் உள்ள கர்நாடக இசை வித்வான்கள் இதில் கலந்து கொண்டு இசை ஆராதனை விழா மானாமதுரை ஆனந்தவல்லி சோமநாதர் திருக்கோவிலில் நடைபெறுவது தனி சிறப்பாக உள்ளது.

## இடை காடார் சித்தர் பௌர்ணமி அன்னதான குழு இடைக்காட்டூர்



நவகிரகங்களைதிசை மாற்றி வைத்த நவகிரக நாயகன் மகான் இடை காடார் சித்தர் ஆலயத்தில் ஒவ்வொரு பௌர்ணமி அன்றும் காலை 10 மணிக்கு உலக மக்கள் யாவரும் நலமாக வாழ ஹோம பூஜை யும் அதனை தொடர்ந்து அபிஷேகம் மற்றும் அன்னதானமும் சிறப்பாக நடைபெறும், பக்தர்கள் அனைவரும் இதில் கலந்து கொண்டு நவகிரக தோசம் திரு மணதடை கல்வி குழந்தை யின்மை ஆகிய பிரச்சனைகளுக்கு தீர்வுகாண அனைவரையும் அன்போடு அழைக்கிறோம்.

பௌர்ணமி விழாவில் நீங்களும் பங்கேற்க

**97515559851 /9751936853**

– இப்படிக்கு

இடை காடார் சித்தர் பௌர்ணமி அன்னதான குழு இடைக்காட்டூர்






aanmeegamalar.com

# பிணி நீக்கும் அம்மன் ஆலயங்கள்

- ❖ நாகர்கோவில் அருகே உள்ள மண்டைக் காட்டில் பகவதி அம்மன் அருள்புரிகிறாள்.தலை வலியால் பாதிக்கப்பட்டவர்கள் பச்சரிசிமாவு, சர்க்கரை, வெல்லம் சேர்த்து மண்டையப்பம் எனும் பிரசாதத்தை செய்து இந்த அம்மனுக்குப் படைக்க தீரா தலை வலியும் நீங்கிவிடும்.
- ❖ சிவகங்கை நாட்டரசன் கோட்டையில் உள்ள கண்ணுடையநாயகி கண் சம்பந்தமான நோய்களைத் தீர்த்தருள்கிறாள்.
- ❖ கோவை பெருமாநல்லூரில் கோவில் கொண்டுள்ள கொண்டத்துக்காளியம்மன், சருமத்தில் ஏற்படும் நோய்களை நீக்கியருள் கிறாள்.
- ❖ திருவிடைமருதூரில் உள்ள வனதுர்க்கா பரமேஸ்வரி அம்பிகை, குழந்தை பிறப்பில் உள்ள தடைகளை நீக்கி, குழந்தை வரம் தருகிறாள்.
- ❖ சென்னை திருவல்லிக்கேணி நெடுஞ்சாலை யில் உள்ள எல்லம்மனுக்கு சர்க்கரைக் காப்பு செய்து வழிபட்டால் சர்க்கரை நோய் கட்டுக்குள் இருப்பதாகச் சொல்கிறார்கள்.
- ❖ உடலின் எந்த பாகத்தில் நோய் ஏற்பட்டாலும் திருச்சி பெரம்பலூர், சிறுவாச்சூரில் உள்ள மதுரகாளி அன்னையிடம் பிரார்த்தித்துக் கொண்டு, ஆலயத்தி லேயே மாவிடித்து, மாவிளக்கேற்றி, ஆலய பிரா காரத் தில் படுத்து அந்தந்த உடல் பாகத்தில் மாவிளக்கை வைத்து வேண்டிக்கொள்ள அந்த நோய்கள் மாயமாய் மறைந்து விடும்.
- ❖ கோவை மேட்டுப்பாளையத்தில் உள்ள தேக் கம்பட்டியில் வனபத்ரகாளியம்மன் திருக்கோவில் உள்ளது. செய்வினை, பில்லி சூனியம் போன்றவற்றால் மனநிலை பாதிக் கப்பட்டவர்கள் இத்தல தேவியை தரிசித்து நலம் பெறுகிறார்கள்.
- ❖ ராமேஸ்வரத்தில் உள்ள தனுஷ் கோடியில் நம்புநாயகி அம்மன் திருக்கோவில் கொண்டுள்ளாள். இந்த ஆலயத்தைச் சுற்றிலும் உள்ளதிருக்குளதீர்த்தங் கள் பல்வேறு நோய்களைப் போக் கும் தன்மை கொண்டவை.சர்வ ரோக நிவாரணதீர்த்தங்கள்என அழைக்கப் படுகிறது. அம்பிகையே தீர்த்த வடிவில் அருள்கிறாள்.
- ❖ சென்னை மயிலாப்பூர் கச்சேரி சாலை பகுதியில் உள்ளமுண்ட கக் கண்ணியம்மன், கண் நோய்களைநீக்குவதில்நிகரற்ற வளாக விளங்குகிறாள்.
- ❖ திண்டுக்கல் நத்தத்தில் உள்ள மாரியம்மன் உடல் ரீதியான எல்லா பிணிகளையும்தீர்த் தருள் புரிகிறாள். அன்னையின் அருளால் பலன் பெற்றவர்கள் கரும்புத் தொட்டில் கட்டு தல், தீச்சட்டி எடுத்தல் என நேர்த்திக் கடன் செலுத்துகிறார்கள்.
- ❖ நவ பாஷாணத்தால் ஆன அஷ்டதசபுஜ மகாலட்சுமி துர்க்கை அம்மனை புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள குறிச்சியில் தரிசிக்கலாம்.
- ❖ நாமக்கல் ராசிபுரத்தில் உள்ள நித்யசுமங்கலி மாரியம்மனுக்கு கண் மலர் வாங்கி சாத்தினால் கண் சம்பந்தமான அனைத்து நோய்களும் நீங்கும்.
- ❖ கோயமுத்தூரில் அருளாட்சி புரிந்து வரும் கோனி யம்மன் தீராத நோய்களை தீர்த் தருள்பவள் என்பது பக்தர்களின் அனுபவ நம்பிக்கை.
- ❖ தஞ்சாவூர், வல்லத்தில் ஏகௌரி அம்மன் அருள்கிறாள். இந்த அம்பிகை தன் பக்தை களின் கணவர்களை நோய்களில் இருந்து காப்பதில் வல்ல வள். அதனால் பயன் பெற்ற பக்தைகள் ஆலயத்திற்கு எருமைக்கன்றை தானமாக வழங்குகின்றனர். மேலும் குழந்தைப் பேற்றில் தடை உள்ள பெண்கள் இந்த அம்பிகையின் சந்நதியில் தரப்படும் எலுமிச்சை சாற்றை அருந்த அன்னையின் அருளால் அவர் களுக்கு அந்த பாக்கியம் கிட்டுகிறது.
- ❖ சென்னை மேற்கு சைதாப்பேட்டைஜோன்ஸ் சாலை சந்திப்பில் கோவில் கொண்டுள்ள கடும்பாடிச் சின்னம் மனிடம் உப்பு மிளகு வாங்கி செலுத்துவதாக பிரார்த் தனை செய்தால் சரும நோய்கள் நீங்குகின்றன. அம்மை நோய் நீங்க ஆலயத்தின் கரு வறையில்வழங் கப்படும் சங்கு தீர்த்தம் அருமருந்தாய் அமைகிறது.
- ❖ திருக்கருகாவூரில் அருளும் கர்ப்பரட்சாம் பிகை கர்ப்பப்பை சம்பந்தமான பிணிகளை நீக்கி யருள்கிறாள்.
- ❖ தூத்துக்குடி வசவப்பபுரத்தில் அலங்காரச் செல்வி அம்மன் அருள்புரிகிறாள்.கனவுத் தொல்லைகளால் பாதிக்கப்பட்டவர்கள் இந்த அன்னையை தரிசித்து, அதி லிருந்து விடுபடுகின்றனர். மூலஸ் தானத்தில் மாரி, காளி என இரு அம்பிகைகள் வீற்றருளும்தலம் நீலகிரி மாவட்டம்,உதகையில் உள்ள சந்தைக்கடை மாரியம்மன் கோவில். கண் நோய்களையும் கொடிய நோய்களையும் இந்த இரட்டை அம்பிகைகள் தீர்க் கிறார்கள்.



# அங்காள பரமேஸ்வரி



எங்கு அநீதி நடந்தாலும் முதலில் அங்கு போய் நீதி கிடைக்கச் செய்வது அங்காள பரமேஸ்வரியின் குணம். அதனால்தான் பெரும்பாலும் அங்காளப் பரமேஸ்வரியின் ஆலயம் ஊரின் எல்லையில் அமைந்திருக்கிறது

## அங்காளம்மனிடம் எப்படி வேண்டிக்கொள்வது?

குடும்பத்தில் குழப்பம், நோய், நொடிகள், பேய் பிசாசு, பில்லி,சூன்யம், வைப்பு, ஏவல், காட்டேரி போன்ற பிணிகள் பிடித்து இருந்தால் அங்காளபரமேசுவரியை மனதில் நினைத்தாலே போதும், அவள் வந்து துன்பத்தைத் தீர்த்து வைப்பதாக பக்தர்கள் கருதுகின்றனர். பொதுவாக எந்த பாதிப்பு வந்தாலும் அம்மா தாயே எங்கள் குடும்ப கஷ்டங்கள், தொல்லைகள், துயரங்கள் போன்றவற்றை எல்லாம் விலக்கி விடு என்று வேண்டிக் கொள்ள வேண்டும்.

## வெற்றி தரும் அங்காள பரமேஸ்வரி வழிபாடு

சிலர் எதில் இறங்கினாலும் தோல்வியே வரும். தொட்டது துலங்காது. மேலும், வேலை வாய்ப்புகளும் அமையாது. பணமும் பாழாகும். இத்தகைய தோல்விகளால் பலரும் துவண்டு போய் விடுவார்கள். இதற்கெல்லாம காரணம் அவர்களின் ஜாதக அமைப்பே!. எப்படிப்பட்ட ஜாதக அமைப்பையும் மாற்றிவிடக்கூடிய சக்தி அங்காள பரமேஸ்வரி ஆலயத்தில் செய்யப்படும் பரிகாரத்துக்கு உண்டு.

ஈஸ்வரி பட்டம் உள்ள அம்மன் தெய்வங்கள் கஷ்டப்படுகிறவர்களுக்கெல்லாம் இரக்க உணர்வோடு வெற்றியைத் தரும் சிறப்பு வாய்ந்தவள் என்று கருதப்படுகிறாள். குறிப்பாக அங்காள பரமேஸ்வரி அனைவருக்கும் வெற்றிக்குத் துணை நிற்கும் தெய்வமாவாள். தொடர்ந்து 27 வெள்ளிக்கிழமை அங்காள பரமேஸ்வரி ஆலயத்துக்கு சென்று காலை 9 மணி முதல் 10 மணிக்குள் அதாவது சனி ஹோரையில் , 18 எலுமிச்சம்பழங்களால் ஆன மாலையிட்டு, 9 எலுமிச்சம்பழங்களை இரண்டாக வெட்டி மஞ்சள் குங்குமம் இட்டு, 18 தீபமிட்டு வழிபட்டு வந்தால், தோல்வியைத் தரும் தோஷம் விலகி ஓடும். வெற்றி மேல் வெற்றி கிட்டும். நினைத்த காரியம் கைகூடும்.


மக்களின் பேராதரவுடன் சரித்திரம் வாய்ந்த
சிவகங்கையில் மீண்டும் புதுபொலிவுடன்
ஞாயிற்றுக்கிழமை வாரம் ஒருமுறை
இப்போது சிவகங்கை சிவன் கோவில் அருகில்
நிரஞ்சன் தோல் கிளினிக்

என்றென்றும் மருத்துவ சேவையில்
மக்களின் மருத்துவர்
Dr.அமலா ராஜமுருகன் MD.(DVL)
தோல்நோய் மற்றும் அழகியல் சிகிச்சை நிபுணர், உதவி பேராசிரியர், மருத்துவ கல்லூரி

அளிக்கப்படும் சிகிச்சை விபரம்
தோல் சம்பந்தமான நோய்கள்
தலைமுடி சம்பந்தமான நோய்கள்
நகம் சம்பந்தமான நோய்கள்
அழகு சம்பந்தமான சிகிச்சைகள் விபரம்

பார்வை நேரம்: ஞாயிற்றுக்கிழமை
காலை 8.30 மணிமுதல் மாலை 6.00 மணிவரை
(வாரம் ஒருமுறை)

அன்பையும் ஆதரவையும் என்றென்றும் நாடும்
நிரஞ்சன் தோல் கிளினிக்
சிவன் கோவில் தெற்கு தெரு,
அழகப்பா பல்கலைக் கழகம், (மேல்மாடி) சிவகங்கை.
தொடர்பு அலைபேசி : 95853 36998


aanmeegamalar.com aanmeegamalar.com aanmeegamalar.com





# வரம் தரும் வைகைகரை அய்யனார் அற்புதங்கள் புரியும்

# அலங்காரகுளம் சோனையா கோவில்




சிவகங்கை மாவட்டம் மானாமதுரை நகர்பகுதியில் தாயமங்கலம் ரோடு அலங்காரகுளத்தில் அருள் பாலிக்கும் வணங்கும் பக்தர்களுக்கு வரம்தரும் வைகைகரை அய்யனார் நம்பியவர்களுக்கு பல அற்புதங்கள் புரியும் அலங்காரகுளம் சோனையா சுவாமி கோவில் உள்ளது.

இக்கோவில் தற்போது திருப்பணிகள் முடிந்து கலை நயமிக்க சிற்பகலை அம்சத்துடன் அமைக்கப்பட்டு கடந்த 2022-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் மகாகும்பாபிஷேகம் நடைபெற்றது.


வரும் ஏப்ரல்6ந்தேதி வியாழக்கிழமை காலை 9 மணிக்கு முதலாம்ஆண்டு வருஷாபிஷேகம் அதைதொடர்ந்து புதிதாக அமைக்க பட்ட ஸ்ரீவைகைகரை அய்யனார் சேமங்குதிரைக்கு மஹாகும்பாபிஷேகம் நடைபெறுகிறது.

இக்கோவிலில் தேவியருடன் அய்யனார், தனிசன்னதியில் பிரம்மாண்டமான சோனையா, சூட்டுகோல் மாயாண்டி சுவாமி சித்தர், ஸ்ரீ லாடசன்னாசி, மற்றும் காளிஅம்மன், ராக்கச்சிஅம்மன், இதுதவிர விநாயகர், முருகன், நவகிரகங்களுக்கும்தனி சன்னதியில் அருள் பாலித்து வருகின்றனர்.

அலங்காரகுளம் தீர்த்தம் அழகர் மலையில் உற்பத்தி ஆகும்நூபுர கங்கைதீர்த்தம் சமமாகும். அலங்காரகுளம் தீர்த்தகரையில் அய்யனார் அருள்பாலிப்பதால் பக்தர்கள்மனமுருகி வேண்டும் வரங்கள் நிறைவேறுவதாக பக்த்தர்கள் தெரிவிக்கின்றனர்.

தாயமங்கலம் முத்துமாரியம்மனை தரிசிக்க செல்லும் ஏராளமான பக்தர்கள் தங்களது வாகனங்களை நிறுத்தி விட்டு வைகைகரை அய்யனார் சுவாமியையும், அலங்காரகுளம் சோனையாசுவாமியையும் வணங்கி வழிபட்டு செல்கின்றனர்.

மானாமதுரை நகர்பகுதியில் உள்ள இக்கோவிலில் தனிசன்னதியில் கட்டிக்குளம் தவதிரு சூட்டுகோல் மாயாண்டி சுவாமி அருள் ஆசிவழங்குகிறார்.


சிவகங்கை மாவட்டம், மானாமதுரை தாலுகா, மானாமதுரை டவுன் அலங்கார குளத்தில் அருள்பாலித்து கொண்டிருக்கும், மானாமதுரை ஒருங்கிணைந்த குலாலர் சமூக நலச்சங்கத்திற்குப் பாத்தியமான

## அருள்மிகு ஸ்ரீ வைகை கரை அய்யனார், அலங்காரகுளம்
## ஸ்ரீ சோணையா சுவாமி மற்றும் அனைத்து பரிவார தெய்வங்களுக்கும்



# முதலாம் ஆண்டு வருஷாபிஷேக விழாவும்

## அருள்மிகு ஸ்ரீ வைகை கரை அய்யனார் சேமங்குதிரைக்கு

# மஹா கும்பாபிஷேக விழா



**நாள்: 6.4.2023**

வியாழன் காலை
9.15 மணி முதல்
10.45 மணிக்குள்

11.00 மணிக்கு அன்னதானம்







இறை பணியில்

ஸ்ரீ வைகைகரை அய்யனார் அலங்கார குளம் ஸ்ரீ சேனையா சுவாமி
திருக்கோவில் நிர்வாக பரம்பரை அறங்காவலர்

**V.காளீஸ்வரன்** தலைவர்

சாலிய வாகனன் மக்கள் இயக்கம் மாநில அமைப்பு செயலாளர்,
சிவகங்கை மாவட்டம், ஒருங்கிணைந்த குலாலர் சமூக நலசங்கம்,
நிர்வாகிகள் மற்றும் சங்க உறுப்பினர்கள், மானாமதுரை.

செல் 8110046517



aanmeegamalar.com

# 24 மணி நேரம் அன்னதானம் நடைபெறும் பஞ்சமுக ப்ரத்யங்கிரா தேவி கோவில்

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை அருகே உள்ள வேதியரேந்தல் விலக்கில் பஞ்சபூதேஸ்வரம் என்னும் இடத்தில் உள்ளது, ஸ்ரீ மகா பஞ்சமுக ப்ரத்யங்கிரா தேவி திருக்கோவில்.

இது முழுவதும் கருங்கல்லால் அமைக்கப்பட்டது. இந்த கோவில் கோபுரம் தமிழக சிற்ப கலைக்கு சிறந்த எடுத்துக்காட்டு ஆகும். இந்த கோவிலில் ஒவ்வொரு மாதம் அமாவாசை தினத்தில் உலக மக்கள் நலமாக வாழவேண்டி ப்ரத்யங்கிரா யாகமும், பவுர்ணமி தோறும் திருவிளக்கு பூஜையும் நடைபெறும். கோவிலில் மற்றொரு சிறப்பம்சமான 24 மணி நேரமும் நடைபெறும் அன்னதானத்தில் கலந்து கொள்ள பக்தர்கள்இரவு, பகலாக குவிகின்றனர்.





தினமும் காலை அன்னதானத்தில் சர்க்கரை பொங்கல், வெண் பொங்கல் அல்லது உப்புமா, கேசரி, வடை வழங்கப்படுகிறது. மதியம் 2 வகை காய்கறிகளுடன் சாம்பார், ரசம், மோர் உடன் நடந்து வருகிறது. சித்திரை தமிழ் வருட பிறப்பு, ஆடியில் சத சண்டி யாக பெரு விழாவில் மூன்று வேலையுமே சிறப்பு அன்ன விருந்து நவ ராத்திரி, தீபாவளி பண்டிகையில் அறு சுவை விருந்தும் தை பொங்கலுக்கு பக்தர்களுக்கு கரும்பும் வழங்கப்பட்டு வருகிறது.

பக்தர்கள் பசியோடு இருக்ககூடாது. என்பதற்காக எப்போதும் அன்னதானம் நடைபெற்று வருகிறது. இதற்காக அன்னதான குழு ஏதும் கிடையாது. பக்தர்களே இங்கு நடைபெறும் அன்னதானங்களில் பங்கேற்று செல்லும் போது அன்னதானம் சப்ளை செய்யும் சேவையும் செய்கிற காட்சியை இங்கு காணலாம்.

இது பற்றி கோவிலில் உள்ள ஞானசேகர சுவாமிகள் கூறியதாவது தானத்தில் சிறந்தது அன்னதானம் ஆகும். வெளியூர்களில் இருந்து வருபவர்கள் பசியோடு சாமி கும்பிடக் கூடாது. பசியாறி சாமி கும்பிடும் போது வயிறு நிறைந்து மன நிறைவோடும் சாமி கும்பிட்டு செல்வார்கள்.




அன்புடன் உலக மக்கள் அனைவரும் ஆனந்தமாய் வாழவேண்டும்

அருள்மிகு தாயமங்கலம்
முத்துமாரியம்மன் திருவிழா
காண வரும் பக்தர்களை
அன்புடன் அழைக்கிறோம்!



என்றும் சுவாமிஜி, மாதாஜி ஆசியுடன்



அய்லுக் சிட்டி
லேண்ட் புரோமோட்டர்ஸ்

அய்லுக் C.சண்முகம் Cell: 98651 32111, 99444 78464


தலைமை அலுவலகம்: 2/415, ஓட்டப்பாலம், பரமக்குடி-623707

கிளைகள்: கேணிக்கரை ரோடு, பைசல் ரோடு, இராமநாதபுரம்
கடச்சனேந்தல் புதுப்பட்டி ரோடு, மங்களகுடி விலக்கு, மதுரை

aanmeegamalar.com

# அற்புத ஆலயங்கள்





மதுரையில் இருந்து ராமேஸ்வரம் செல்லும் சாலையில் உள்ள ஸ்ரீ மடப்புரம் பத்திரகாளிஅம்மன் தன்னை நாடி பக்தர்களின் மனகுறையை போக்கி வளம் அடையசெய்வதாக பக்தர்களால் நம்பப்படுகிறது. கோவில் பிரகாரத்தில் எங்குஇருந்து பார்தாலும் மடப்புரம் காளியை வழிபடலாம்.

இதேசாலையில் திருப்பாச்சேத்தி என்னும் இடத்தில் பல ஆண்டுகளாக சுயம்புவாக ஒரேகல்லிலில் ஸ்ரீதுர்கை அம்மன் காட்சிதருகிறார்.

கையில் ஆயுதம் ஏந்தி சங்குசக்கரத்துடன் துர்கையை நாம் தரிசிக்கலாம். அம்மனை சாந்தபடுத்துவதற்க்காக இங்கு நந்தி தோன்றியதாக கூறப்படுகிறது. தமிழகத்தில் துர்க்கைமுன் நந்தியை இங்கு மட்டுமே காணலாம்.

சிவகங்கையில் இருந்து இளையான்குடி செல்லும் சாலை யில் உள்ள ஆலமரம் கீழ் தர்மமுனிஸ்வரர் குமராயி அம்மன் கோவில் உள்ளது. இக் கோவிலில் மனம்உருகி வழிபாடு செய்யும் பக்தர்கள் இங்கு உள்ள மரத்தின் மீது புடவைகளை சாத்தி வழிபட்டு வருகின்றனர்.

மானாமதுரை இருந்து வேதியேரேந்தல் செல்லும் வழியில் ஸ்ரீமகாபஞ்சமுக ப்ரத்தியங்கிராதேவி கோவில் உள்ளது. இங்கு அன்னதானம் சாப்பிட்ட பின்பே அம்மனை வணங்கி செல்கின்றனர். எந்த நேரமும் அன்னதானம் வழங்கபடுகிறது.

இதேபோல் வைகைஆற்றுகரையில் உள்ள ஏனாதி செங்கோட்டை கிராமத்தில் எழுந்தருளும் ஸ்ரீ அங்காள பரமேஸ்வரியை ஏராளமான பக்தர்கள் தரிசித்து செல்கின்றனர்.




அருள்மிகு தாயமங்கலம் முத்துமாரியம்மன் திருவிழாவினை காண வரும் பக்தர்களை அன்புடன் அழைக்கிறோம்!

A.L.S.ராமையாநாடார் - சன்ஸ்

மரம், ஓடு, சிமிண்ட், உரம் வியாபாராம்

236, மெயின்ரோடு, மானாமதுரை

ஸ்ரீ அருணாட்சி அம்மன் பிரிக்ஸ்

உயர்தர சேம்பர் செங்கல் தயாரிப்பாளர்கள்

செல்: 99946 75130, 94431 68202, 98424 68202, 04574269905



aanmeegamalar.com

# நின்ற கோலத்தில் அருள்புரியும்
# தாயமங்கலம் முத்துமாரிஅம்மன்

தமிழ்நாட்டின் சிவகங்கை மாவட்டத்தில் உள்ள இளையாங்குடி வட்டாரத்தில் அமைந்துள்ள ஒரு கிராமம் தாயமங்கலம் ஆகும்.

சிவகங்கை மாவட்டம் இளையான் குடியில் இருந்து 11 கிமீ தொலைவிலும், மானாமதுரையில் இருந்து 30 கிமீ தொலைவிலும், சிவகங்கையில் இருந்து 32 கிமீ தொலைவிலும், காளை யார்கோவிலில் இருந்து 18 கிமீ தொலைவிலும், ராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடியில்இருந்து 22 கிமீ தொலைவிலும், மதுரையில் இருந்து 88 கிமீ தொலைவிலும் உள்ளது தாயமங்கலம் முத்துமாரியம்மன் கோயில்.

இத்திருக்கோவிலில் வீற்றிருக்கும் அம்மன் பல்வேறு சிறப்புகளைப் பெற்றுள்ளார். இத்தலத்து அம்மன் சிறுமி வடிவத்தில் வணங்கப் பட்டு வருகிறார். இக்கோவிலில் வருடா வருடம் தமிழ் மாதம் பங்குனி மாதத்தில் 10 நாட்கள் மிக விமரிசையாக திருவிழா நடைபெறும்.

இந்த 10 நாட்கள் கொண்ட திருவிழாவில் தேரோட்டம் மிகவும் சிறப்பான வைபவம் ஆகும்.இத் திருக்கோவிலின் அமைப்புப்படி, கிழக்கு திசையில் அம்மனின் பார்வை பட, கொடிமரம் எதிர் அமைத்து, வடபுறம் தெப்பக்குளம் உரு வாக்கி 1914ல் கட்டப்பட்டுள்ளது.

இந்த கோவிலில் முத்துமாரியம்மன் வீற்றிருக்க, அருகே விநாயகர், முருகன் மற்றும் சோனையா உள்ளிட்ட இஷ்ட தெய்வங் கள் காட்சியளிக்கின்றனர். இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் இத் திருக்கோவில் உள்ளது.

கன்னித் தெய்வமாக இருந்து சுற்று வட் டாரத்தில் 22 கிராம மக்களுக்கும், தாயாகவும், மாங்கல்ய பாக்கியம் எனும் மங்கல வரம் அருளும் நாயகியாகவும் இருந்து அம்மன் அருள்பாலிக்கும் ஊர் என்பதால், ‘தாய்மங்கலம்’ என இவ்வூர் அழைக்கப்பட்டதாம். அதுவே, பின்னர் தாய மங்கலமாக மருவியது என்கிறார்கள்.

கன்னித் தெய்வமாய் கோயில் கொண்டிருக் கிறாள், ஸ்ரீமுத்துமாரியம்மன். இத்தெய்வம் கன்னித்தெய்வமாக இருப்பதால் திருமண வரம் வேண்டுவோர், தாலிப்பொட்டினை அம்மன் காலடி யில் சமர்ப்பித்து வழிபடுவதை வழக்கமாகக் கொண்டுள்ளனர்.

இத்தலத்து வரலாற்றுப்படி, பல ஆண்டுகளுக்கு முன்பு, இப்பகுதியைச் சேர்ந்த வணிகர்கள் தங்கள் பகுதியில் விளையும் பொருட்களை விற்பனை செய்வதற்காக, அடிக்கடி மதுரைக்குச் சென்று வருவது வழக்கம். இந்த கிராமத்தைச் சேர்ந்த முத்துச் செட்டியார், இவர் மீனாட்சியம்மன் மீது அதீத பக்தி கொண்டவர். மதுரைக்கு வியாபார நிமித்தமாக செல்லும்போதெல்லாம் மீனாட்சியையும், சொக்கநாதரையும் தவறாமல் வழிபட்டு வருபவர், அப்படி ஒரு நாள் மீனாட்சியம்மனிடம், தனக்கு குழந்தை இல்லாததை எண்ணி மனமுருகி வேண்டி மதுரையில் இருந்து ஊர் திரும்பிக் கொண்டிருந்தார். வழியில், சிறுமி ஒருத்தி பாதை தெரியாமல் அழுது கொண்டிருந்ததை கண்டார். அந்தச் சிறுமியை விசாரித்தபோது, தனது பெயர் முத்துமாரி என்றும், தனது தாய் தந்தையிடமிருந்து பிரிந்து விட்டேன் என்றும் எங்கு போவதென வழிதெரிய வில்லை என்றும் கூறி தேம்பினாள்.



"கவலைப்படாதே அம்மா! உன்னை நான் பத்திரமாகப் பார்த்துக்கொள்கின் றேன்" எனக் கூறி அந்தச் சிறுமியை தன்னுடன் அழைத் துப் போனார். மதுரை மீனாட்சியே இந்தக்குழந் தையை தனக்குத் தந்ததாக எண்ணினார். ஆனால், அவரது சந்தோஷம் நீண்ட நேரம் நிலைக்கவில்லை.

செல்லும் வழியில் அங்குள்ள குளத்தின் அருகில். பயணக்களைப்பாக இருந்ததால், சிறுமியை கரையில் உட்கார வைத்துவிட்டு குளத்தில் இறங்கி குளிக்கப் போனார். ஆனால், குளித்து முடித்துவிட்டு கரைக்கு வந்து பார்த்தால், குழந்தையைக் காணவில்லை. இதனால் மனம் வெறுத்துப்போன முத்துச் செட்டியார் தன் மனைவியிடம் நடந்ததையெல்லாம் கூறிவருந்தினார். இரவு உணவைகூட சாப்பிடாமல், படுக்கப் போனவர் அப்படியே கண்ணயர்ந்து விட்டார்.

அவரது கனவில், 'சிறுமியாக வந்தது நான்தான் என்றும் ஊருக்கு அருகாமை யிலிருக்கும் கள்ளிக்காட்டில், நான்உறைய இருக்கிறேன் என்றும் கோயில் கட்டி வழிபடுபவர்களுக்கு, வேண்டும் வரங்களை அருளுவேன் என்றும் கூறி மறைந்தாள் முத்துமாரி. படுக்கையில் இருந்துஎழுந்த வியாபாரி, தன் மனைவியிடம் எல்லாவற்றையும் கூறினார்.

மறுநாள் பொழுது விடிந்ததும் முதல் வேலை யாக ஆற்று மணலில் அம்மன் சிலையை அமைத்து வழிபடத்தொடங்கினார். இவரைத் தொடர்ந்து ஊர் மக்களும் வழிபட்டனர். நாளடை வில் அந்தப் பகுதி மக்களின் கண்கண்ட தெய்வமானாள் முத்து மாரியம்மன்.

அம்மை நோயினால் பாதிக் கப்பட்ட வர்கள், செவ்வாய் வெள்ளி, ஞாயிற் றுக்கிழமைகளில் கோயிலுக்கு வந்து வணங்கி இங்கிருந்து தீர்த்தம் பெற்றுச்சென்றால் நோய் குணமாகும்





என்பது இங்குள்ள மக்களின் நம்பிக்கையாக இருக்கிறது. இதுதவிர திருமண வரம், குழந்தை பாக்கியம் வேண்டியும் ஏராளமான பக்தர்கள் வருவதையும், பிரார்த்தனை நிறைவேறி நேர்த்திக்கடன் செலுத்து பவர்களையும் இங்கு காணலாம். மாவிளக்கு எடுத்தல், கரும்பு தொட்டிலில் குழந்தையை சுமந்து வருதல், கண்மலர் காணிக்கையாக்குதல் என பல்வேறு நேர்த்தி கடன்களை பயபக்தியுடன் செய்வர்.

ஆயிரக்கணக்கான பக்தர்கள் மாவிளக்கு எடுத்தும் தீச்சட்டி, பால்காவடி, சிலா குத்தல், வேல், அலகு குத்துதல், கரும்புத் தொட்டில், ஆயிரம் கண் பானை எடுத்தும் அம்மனுக்கு நேர்த்திக்கடன் செலுத்துகின்றனர்.

விழா காலங் களைத் தவிர மற்ற நாட்களில் தினசரி பூஜைகள், அன்னதானம் நடைபெறுகிறது. கண் நோய் உள்ளவர்களுக்கு இங்கு அம்மன் சன்னதியில் அபிஷேக தீர்த்தம் கொடுக்கின்றனர்.

கண்பிரச்சினை தீர்ந்தவுடன் கண்மலர் செலுத்தியோ அல்லது அங் கப்பிரதட்சனை செய்தோ தங்களின் நேர்த்திக்கடனை செலுத்து கின்றனர்.

திருவிழாவை தொடர்ந்து பக்தர்கள் வசதிக் காக, மதுரை, கமுதி, காளையார்கோவில், பார்த்தி பனூர், இளையான்குடி, அருப்புக்கோட்டை ஆகிய ஊர்களிலிருந்து சிறப்பு பேருந்து தாயமங்க லத்திற்கு இயக்கப்பட்டு வருகிறது.







aanmeegamalar.com



# புற்றாக தோன்றிய மாரியம்மன்

சிவகங்கை மாவட்டம் மானாமதுரையில் இருந்து சிவகங்கை செல்லும் வழியில் உள்ள காட்டு உடைகுளத்தில் ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில் உள்ளது. இக்கோவிலில் பங்குனி பத்துநாட்கள் நடைபெறும்.

விழாவில் ஏராளமான பக்தர்கள் தீமிதித்து நேர்த்தி கடன் செலுத்தி வழிபடுவார்கள். இக்கோவிலில் உள்ள மரத்தில் பல ஆண்டு காலமாக அம்மன் மற்றும் விநாயகர் முகத்துடன் மாரியம்மன் காட்சிதருவதாக பக்த்தர்களால் வணங்கப்பட்டுவருகிறது.

இங்கு நடைபெறும் ராகுகால பூஜைகள் கலந்து கொண்டு வேண்டிசெல்கின்றனர்.

புற்றுகோவிலை வழிபடவரும் போது முட்டைகள் வைத்து வழிபடுகின்றனர் பின்முட்டைகள் காகத்திற்கு உணவாக வழங்கப்படுகிறது. நாகர் புற்றுஅம்மனை வழிபட்டு நோய்கள் குணமாகியதாக கோவில் பரம்பரை பூசாரி சுப்பிரமணியன் கூறினார். மேலும் பயத்தால் பாதிப்படைந்தவர்களுக்கும் அம்மைநோயால் பாதிப்பு அடைந்தவர்களுக்கும் மஞ்சள் தீர்த்தம் வழங்கபடுகிறது.


ஸ்ரீகாமாட்சி அம்மன் துணை ஸ்ரீதொட்டிச்சி அம்மன் துணை ஸ்ரீபதினெட்டாம்படி கருப்பன் துணை
மூன்று தலைமுறை கண்ட கைராசியான ஸ்தாபனம்
பீனாஸ் பத்திர எழுத்தகம்
பத்திர எழுத்தாளர்
Prop.N.P.வேல்முருகன் B.Com
State Document Writer
செல்: 99526 39497
95851 88741

D.தனபாலன்
பத்திர எழுத்தாளர்
பத்திரம் சம்பந்தப்பட்ட அனைத்தும் சிறந்த முறையில் செய்துதரப்படும்
மேற்கு ரதவீதி, அண்ணாசிலை அருகில்,
மானாமதுரை 630 606
செல்: 98424 09829

லெட்சுமி
ஆட்டோ ஸ்பேர்ஸ்
அனைத்து டூவீலர் வாகனங்களுக்கும் உதிரி பாகங்கள்
குறைந்த விலையில் கிடைக்கும் சேல்ஸ் & சர்வீஸ்
சாஸ்தா நகர், சிவகங்கை மெயின்ரோடு மானாமதுரை-630 666
புதிய கிளை: தாகியார்நகர், மானாமதுரை
96989 55068 /99521 24373

# தாயமங்கலம் அம்மன் இருக்கும் திசைநோக்கி வீட்டுவாசலில் பொங்கல் வைக்கும் பக்தர்கள்




மதுரை மீனாட்சி அம்மன் தன் தீவிர பக்த்தர்க்கு குழந்தையாக காட்சிகொடுத்த இடம் மீனாட்சியே உருமாறி காட்சி தந்ததால் மாரியம்மன் திருப்பெயரால் கோவில் எழுப்பபட்டது.

இங்கு வரும் பக்த்தர்களால் தமிழகத்தில் அரசுபோக்குவரத்து கழகத்திற்கு அதிக வருவாய் ஏற்படுத்தி கொடுத்த கோவில் தாயமங்கலம் ஆகும்.

கடும் கோடைவெயிலின்போது இங்கு நடைபெறும் பங்குனி திருவிழா கொடியேற்றத்தின்போது இரவில் மழையும், பொங்கல் விழாவின் போது பகலில் மழையும் பெய்யும் இது ஆன்மிக அதிசயமாக பக்த்தர்கள் கருதுகின்றனர்.

மதுரை சிவகங்கை, ராமநாதபுரம் மாவட்டங்களில்பங்குனி பொங்கல் விழாநாளில் தங்கள் வீட்டுக்கு முன்பு தாயமங்கலம் முத்துமாரியம்மன் இருக்கும் திசைநோக்கி பொங்கல் வைத்து வழிபாடு செய்வது இன்றும் வழக்கத்தில் உள்ளது. திருவிழா காலம் மட்டும்மின்றி ஆண்டு முழுவதும் பக்தர்கள் கோவில் வந்து நேர்த்தி கடனை செலுத்தி வருகின்றனர்.

அருள்மிகு தாயமங்கலம் முத்துமாரியம்மன் பெருந்திருவிழா
காண வரும் பக்தர்களே வருக! வருக!

கோபால் இந்திரா திருமண மஹால்

தாயமங்களம் ரோடு, மானாமதுரை







P.கோபால்
மாவட்ட எம்.ஜி.ஆர்
மன்ற துணை செயலாளர்

இந்திரா
அதிமுக 9வது வார்டு
நகர்மன்ற உறுப்பினர்

செல்: 9629214801
G.தீனதயாளன்
7708141313

aanmeegamalar.com

# குழந்தை வந்து பக்தர்களின் குறைகளை தீர்க்கும் தாயமங்கலம் முத்துமாரியம்மன்

சிவகங்கை மாவட்டம் மானாமதுரையில் இருந்து 18 கிலோமீட்டர் தூரத்தில் உள்ளது தாயமங்கலம் 'கிராமம் முன்னொரு காலத்தில் இந்த ஊரை சேர்ந்த முத்து செட்டியார் என்ற வாணிபர் தினமும் மதுரை சென்று வாணிபம் செய்து விட்டு ஊர்திரும்புவார். அப்போது தினமும் மீனாட்சி அம்மனை வணங்கிவிட்டு தான் ஊர் திரும்புவார்.





குழந்தை இல்லாத அவர் மதுரை மீனாட்சியிடம் மனம் உருகி வேண்டினார். ஒரு நாள் ஊர்திரும்பும் போது வழியில் இருந்த ஊரணியில் நீர் அருத்தி காட்டுவழியில் நடத்து வந்தார். அப்போது அழகியபெண் குழந்தை அழுது கொண்டிருந்தது. குழந்தை இல்லாத நமக்கு மீனாட்சி குழந்தையாக வந்துள்ளார் என குழந்தையை தூக்கி தோளில் சுமந்து கொண்டு தாயமங்கலம் கண்மாய் வழியாக வணிகர் வந்தார். அப்போது திடீர் என குழந்தை மாயமாய் மறைந்து விட்டது.

குழந்தையை பல இடங் களில் தேடினார். எங்கும் குழந்தையை கானவில் வில்லை. வீடு திரும்பிய அவர் தன் மனைவியிடம் குழந்தை கிடைத்த விவரத்தை தெரி வித்து, பின் குழந்தை மாயமானது குறித்தும் கூறினார். அன்று இரவு முத்துசெட்டியார் வணி கரிடம் கனவில் மீண்டும் அந்த குழந்தை தோன்றி தான் கத்தாளங்காட்டில் தங்கி இருப்பதாவும் அங்கு எனக்கு கோவில் கட்ட வேண்டும், எனவும், கூறி மறைந்துவிட்டது.

அதை தொடர்ந்து அவர் அதிகாலை எழுந்து ஊர் பிரமுகர்களுடன் சென்றார். அங்கு கனவில் கூறிய இடத்தில் குழந்தை நடத்த பாதம் அடையாளம் தெரிந்தது. பின் பிடிமண் எடுத்து குடிசையில் முதலில் கோவில் அமைத்து குழத் தை உருமாறி வந்ததால்"

முத்து மாரி என அழைத்தனர். அதனை தொடந்து வறட்சியான பகுதிகள் செழித்தது. முத்துமாரிக்கு

1914ம் ஆண்டு கருங்கல்லில் திருஉருவ சிலை அமைக்கப்பட்டு கோவில் கட்டப்பட்டது. குழந்தை பாக்கியம், நோய் நொடிகள், தீராத அம்மை போன்ற நோய்களை அம் மன் குணமடைய செய்து வருகிறாள்.இன்றும் பக்தர்கள் கனவில் குழந்தையாக தோன்றி குறைகளை தீர்ப்பதால் ஏராளமான பக்தர்கள் தீசட்டி எடுத்து ஆடிவந்து தரிசனம் செய்துவருகின்றனர்.

ஆண்டுதோறும் பங்குனி மாதம் நடைபெறும் 10 நாள் திருவிழா சிறப்பு வாய்ந்தது ஆகும். நவராத்திரி, விழாவும் 10 நாட்கள் நடத்தப்படுகிறது. மதுரையில் இருந்து தாய மங்கலத்திற்கு நேரடி பஸ் வசதியுள்ளது.





அருள்மிகு தாயமங்கலம் முத்துமாரியம்மன்
திருவிழாவினை காண வரும்
பக்தர்களை அன்புடன் அழைக்கிறோம்!




















சுப.மதியரசன்
B.Com. Ex MLA
இளையான்குடி வடக்கு
ஒன்றியச் செயலர் (வடக்கு)

சுப.தமிழரசன்
B.Sc
தலைவர் தொடக்க வேளாண்மை
கூட்டுறவு கடன் சங்கம், கண்ணமங்கலம்

தாயமங்கலம் ஊராட்சி
இளையான்குடி ஊராட்சி ஒன்றியம் சிவகங்கை மாவட்டம்

அருள்மிகு தாயமங்கலம் முத்துமாரியம்மன்
பெருந்திருவிழா காண வரும் பக்தர்களே வருக! வருக!

பிளாஸ்க் பைகளை தவிர்ப்போம் சுற்றுபுறங்களை தூய்மையாக காப்போம்
மழை நீர் சேகரிப்போம் குடிநீரைச் சிக்கனமாக பயன்படுத்துவோம்





ஆணையாளர் வட்டார வளர்ச்சி அலுவலர்

M.மலைராஜ்,
தலைவர்

R.ராமன்
துணைத்தலைவர்

வார்டு உறுப்பினர்கள்: K.செல்லம்மாள், M.அன்பு கலைச்செல்வி, P.விக்டோரியா, R.அமுதா,
M.இந்திரா, C.ஜெயராணி, M.முத்துலெட்சுமி, M.புஷபம், ஊராட்சி செயலாளர் C.கீதா,
மேல்நிலைதொட்டி இயக்குநர்கள்,
தூய்மைப் பணியாளர்கள், காவலர்கள்

தாயமங்கலம் ஊராட்சி மன்றம்

aanmeegamalar.com





# தீராத நோய்களை தீர்க்கும் தாயமங்கலம் முத்துமாரிஅம்மன்

தமிழ்நாட்டின் சிவகங்கை மாவட்டத்தில் உள்ள இளையாங் குடி வட்டாரத்தில் அமைந்துள்ள ஒரு கிராமம் தாயமங்கலம் ஆகும்.

மதுரையில் இருந்து 88 கிமீ தொலைவில் உள்ள தாயமங்கலம் முத்துமாரியம்மன் கோவில் இத்திருக் கோவிலில் வீற்றிருக்கும் அம்மன் பல்வேறு சிறப்புகளைப் பெற்றுள்ளார்.

இத்தலத்து அம்மன் குழந்தை வடிவில் தோன்றி அன்னை மீனாட்சியாகவே நின்றகோலத்தில் பக்தர்களுக்கு காட்சிதருகிறார்.

ஆண்டு தோறும்தமிழ் மாதம் பங்குனி மாதத்தில் 10 நாட்கள் மிக விமரிசையாக திருவிழா நடைபெற கிறது.

இத்திருக்கோவிலின் அமைப்புப்படி, கிழக்கு திசையில் அம்மனின் பார்வை பட, கொடிமரம் எதிர் அமைத்து, வடபுறம் தெப்பக்குளம் உரு வாக்கி தீர்த்தகுளமாககருதபடுகிறது. இங்கு வருபவர்கள் முதலில் குளத்தில் நீராடி பின் தீசட்டி, அங்கபிரதட்சனம், பால்குடம், கரும்பு தொட்டில் எடுத்து நேர்த்தி கடன்செலுத்துவார்கள்.



ஆண்டு தோறும் பொங்கல் விழாவின்போதுமட்டும் இரண்டு நாட்கள் பக்தர்கள் 24 மணிநேரமும் தரிசனம்செய்யலாம்.

பிறநாட்களில் காலை7 மணிமுதல் இரவும்7 மணிவரை பக்தர்கள் அனுமதிக்க படுகின்றனர். தீராத நோய்களையும் பக்தர்கள் கனவில் தோன்றி என்னை நாடிவா என அம் மன் கூப்பிட்டதாகவும் அம்மனின் அருள் பெற்ற பக்தர்கள் பலர் இன்றும் தெரிவிக்கின்றனர்.

இதற்காக ஆதாராமாக திருவிழா காலத்தில் ஆயிரக்கணக்கான பக்தர் கள் தீச்சட்டி ஏந்தி கோவிலை வலம் வருவதை இப்போதும் காணலாம்.

தீர்த்தகுளம் என்பதால் திருவிழாவின் போது குளம் தூர்வாரி சீரமைக்கப்பட்டு தண்ணீர் நிரப்பபடுவதாக கோவில் அறங்காவலர் வெங்கடேசன் செட்டியார் தெரிவித்தார்.

பக்தர்கள் எந்த குறையும்இன்றி மனமகிழ்ச்சியுடன் சுவாமி தரிசிக்க சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டு உள்ளது.

தற்போது ராஜகோபுரம் கும்பாபிஷேக திருப்பணி நடைபெற்றுவருகிறது.

# தாயமங்கலம் அருள்மிகு முத்துமாரியம்மன் திருக்கோயில்



## பங்குனி பெருந்திருவிழா

திருவிழா காண வரும்
பக்த கோடி பெருமக்களே வருக! வருக!!
தாயமங்கலம் ஸ்ரீ முத்துமாரியம்மன் அருள் பெறுக!

| | |
|---|---|
| 5.4.2023 (பங்குனி 22 புதன்) | பொங்கல் விழா |
| 6.4.2023 (பங்குனி 23 வியாழன்) | இரவு 7.15 மணிக்கு திருக்கோவில் மின்சார தீப அலங்கார திருத்தேர் வைபவம் |
| 7.4.2023 (பங்குனி 24 வெள்ளி) | காலை 7 மணி பால்குடம் மாலை 5.50 மணிக்கு ஊஞ்சல் உற்சவ விழா இரவு 10.20 மணிக்கு புஷ்ப பல்லக்கு |
| 8.4.2023 (பங்குனி 25 சனி) | இரவு 7.20 மணிக்கு திருக்கோவில் தீர்த்தவாரி |

திருக்கோயில் ராஜகோபுரம், தங்கரதம் திருப்பணி நடைபெறுவதால் நன்கொடை வழங்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.



திருக்கோயிலில் நடைபெறும் அன்னதானத் திட்டத்திற்கு நன்கொடை வழங்க வேண்டுகிறேன்



மதுரை, மானாமதுரை, காரைக்குடி, பரமக்குடி, இளையான்குடி, சிவகங்கை அருப்புக்கோட்டை ஆகிய ஊர்களிலிருந்து இரவு பகலாக அரசு சிறப்பு பஸ் வசதி செய்யப்பட்டுள்ளது

அன்புடன்அழைக்கும்:





## மு.வெங்கடேசன் செட்டியார்

பரம்பரை அறங்காவலர், அருள்மிகு முத்துமாரியம்மன் திருக்கோவில், தாயமங்கலம், இளையன்குடி வட்டம்

திருக்கோவில் போன்:04564-206614
www.thayamangalammuthumari.org


SML Graphics, Chennai 9444228203

aanmeegamalar.com



அருள்மிகு தாயமங்கலம்
முத்துமாரியம்மன் பெருந்திருவிழா
காண வரும் பக்தர்களே வருக! வருக!




# ஸ்ரீ அழகர்மலையான்

## தங்கமாளிகை, பஸ் டிரான்ஸ்போர்ட்

**916 KDM தங்கம் மற்றும் வெள்ளி நகைகள் கிடைக்கும்**

**எங்களிடம் சுற்றுலா செல்ல A/C, AIR பஸ்கள் வாடகைக்கு கிடைக்கும்**













அன்புடன் அழைக்கும்

**C.தெட்சணாமூர்த்தி** செல்: 9442041899 / 7373041899

மகர் நோன்பு பொட்டல் செல்லும் வழி, காரைக்குடி

அன்புடன் அழைக்கும்

**T.தனசேகரன்** செல்: 9384290449 / 9443465663

ரவி ஹோட்டல் காம்ளக்ஸ் சிப்காட், சிவகங்கை ரோடு, மானாமதுரை

aanmeegamalar.com